வெளியீடு. 7.

இங்கர்சாலின் சொற்பொழிவு.

நான் சம்சயவாதி ஆனதேன்?

ஆக்கியோன்:

கர்னல். ராபர்ட் G. இங்கர்சால்.

வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

ஈரோடு.

[அணா 3.

1934.

இங்கர்சாலின் சொற்பொழிவு.

நான் சம்சயவாதி ஆனதேன்?

ஆக்கியோன்:

ராபர்ட் G. இங்கர்சால்.


வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,

ஈரோடு.

இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட அனுமதி கொடுத்த லண்டன் பகுத்தறிவு நூற்பிரசுரக் கழகத்தாருக்கு நமது மனப்பூர்வமான நன்றியுரித்தாகுக.

பகுத்தறிவு நூற்பதிப்புக்
கழகத்தார், ஈரோடு.



ராபர்ட் G. இங்கர்சால்.

நான் சம்சயவாதி ஆனதேன்?

———:O:———

உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒழுங்கிற்கும் சட்ட வரம்பிற்கும் உட்பட்டிருத்தல் போலவே மத விஷயங்களும் ஒரு ஒழுங்கிற்கும் சட்ட வரம்பிற்கும் உட்பட்டிருக்கத்தான் வேண்டும். பிற விஷயங்கள், சட்ட நியதிகளுக்கு உட்பட்டிருத்தல் இயல்பாதல் போலவே, மத விஷயங்களும் சட்ட நியதிகளுக்கு உட்பட்டிருத்தலே இயல்பானதாகும். எவ்வித ருஜுவும் இல்லாமல் நம்பித்தான் ஆகவேண்டும் என்று மனித வர்க்கத்தைக் கட்டாயப்படுத்தக் கூடிய எவ்விஷயமும்—எக்கொள்கையும் வளர்ச்சியடையவும், நிலைத்திருக்கவும் முடியாது. அறியாமை காரணமாக, கண்டவைகளையெல்லாம், நம்பிக்கொண்டிருப்பதாக வீண் புகழ்ச்சியடையக்கூடிய ஒருவன் இருப்பானுயின், அவனை யாரும் ஒரு அறிஞன் என்று கூற முடியாது. எந்த ஒரு மனிதன் கிறிஸ்துமத வேதமாகிய பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் காய்தலின்றி (துவேஷமின்றி) படித்து அறிகின்ருனே அவன் வைதிகக் கிறிஸ்தவனுயிருக்க ஒரு பொழுதும் முடியாது. நல்ல அறிவாளி ஒருவன் ஒரு மதத்தை பயமில்லாமலும் துவேஷமற்ற மனப்பான்மையுடனும் ஆராய்ச்சி செய்தால் அவன் அம்மதத்தில் ஒரு நாளும் பற்றுதல் கொள்ளமாட்டான்—கொள்ளவும் முடியாது. எஹோவா (கர்த்தர்) கடவுள் அல்லவென்றும், பைபிள் என்னும் புஸ்தகம் அருள் வாக்கு

அல்லவென்றும் கிறிஸ்து மதம் மற்ற மதங்களைப் போல வே மனிதனுல் ஆக்கப்பட்டதுதான் என்றும் அநேகர் முடிவுக்கு வந்துள்ளார்கள். ஆனல், "ஒரு முழு முதற் சக்தி இருக்கத்தான் வேண்டும், அதன் பெயர் எஹோவா அன்று, பைபிள் அவருடைய வாக்கியங்கள் அல்ல, சகலத்தையும் வரம்பிற்கு உட்படாது ஆட்சி புரிந்துவரும் ஒரு மகா சக்தி எங்கோ ஓர் இடத்திலிருந்து உலகை ஆண்டு கொண்டு இருக்கத்தான் வேண்டும்" என்று அவர்கள் சொல்லுவது வழக்கம்.

இக்கூற்று நிலை நிறுத்தக்கூடியதன்று. பைபிளில் சொல்லப்படும் கொடுமைகளோடு எஹோவாவின் (சர்வேஸ்வரனின்) நற்குணத்தைப் பொருந்தவைக்க முடியாதவனுக்கு இயற்கைப்பொருள்களில் காணும் கெடூரக் குணத்தோடு அனுமானிக்கப்படும் கடவுளின் அறிவையும், நற்குணத்தையும் பொருந்தவைப்பது முடியாத காரியமாகும். உலகத்தின் கொள்ளைநோய்க்கும், பஞ்சத்திற்கும், பூகம்பத்திற்கும், புயல்காற்றிற்கும், அடிமைத்தனத்திற்கும், மெலியாரை வதை செய்து வலியார் ஜயமடைவதற்கும், அநியாயத்தின் அளவிலா வெற்றிக்கும் காரணம்கூற ஒருவனுக்கும் ஒரு பொழுதும் முடிவதில்லை. சத்தியத்தின் பொருட்டு அநேக சிலர்கள் கொல்லப்பட வேண்டிய அவசியமென்ன வென்பதை அவர்களால் அறிய முடிவதில்லை. அறிவிலிகளும் அயோக்கியர்களும், நற்குண சிலர்களையும், மேதாவிகளையும், பேரன்புடைய பெரியார்களையும் என் உயிருடன் நெருப்பிட்டு—எரித்துக்கொல்ல வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியாது.

பெண்களும், சிசுக்களும் கஷ்டப்படவேண்டியதற்குக் காரணம் என்னவென்பதைப்பற்றி ஒரு ஆஸ்திகன் திருப்திகரமாய் விவகரிப்பானு? உலகின் மதக்கொடுமைகளுக்கு நியாயம் உண்டு என்று அவன் எவ்வாறு ருஜுப்பிக்க முடியும்? தீயையும், வாளையும் கொண்டு மதத் துவேஷங்கள் வளர்க்கப்படவேண்டிய அவசியமென்ன? கடவுள் தன் சிநேகிதர்களுடைய இரத்தத்தில் தன் பகைவரின் வாள்கள் தோய்ந்தெழும்படி ஏன் விட்டுக் கொண்டிருந்தார்? கடவுள் தன் சிம்மாசனத்தில் சோம்பேறித்தனமாய் உட்கார்ந்துகொண்டு, அத்தகைய சம்பவங்களை நடக்கும்படி ஏன் அனுமதித்துக்கொண்டிருந்தார்? சிறைப்பட்டவர்களுடைய தொழுகைகளுக்கும், உதவியற்றோர்களுடைய பிரார்த்தனைகளுக்கும், கடவுள் ஏன் பதில் கூருதிருந்து விட்டார்? அடிமையின் வெற்றுடலின் மேல் அடிக்கப்பட்ட அடிகளின் சப்தத்தைக் கேட்ட பிறகாவது, அவ்வடிமையின் பிரார்த்தனைகளுக்குக் கடவுள் ஏன் காது கொடுக்கவில்லை? தாய்மார்களின் ஸ்தனங்களில் பாலருந்திக் கொண்டிருந்த சிசுக்கள் விற்கப்பட்டபொழுது, அத்தாய்மார்களின் பிரலாபங்களைக் கேட்டு கடவுள் ஏன் செவிடன் போலிருந்தார்? மனித சாட்சியத்தின் உண்மை மதிப்பையும், மனிதனுடைய மனத்தின் சக்திக்குறைவையும், உயர்வையும் அறிந்திருக்கும் ஒருவன் அவசியமாக கடவுளிடம் கவனஞ் செலுத்த மாட்டான் என்று தான் தோன்றுகிறது. உலகக் கிரியைகளின் ஆதி அந்தங்களை நிர்ணயிக்கவேண்டுமென்பதில் அவனுக்கு நம்பிக்கை கிடையாது. அவன் இயற்கைக்கு மேலான சக்திகளை உணர்வதிலும், அளவிற் கெட்டாத ஓர் புருஷனை (Personality) சிந்திப்பதிலும்

நம்பிக்கை கொள்வதில்லை. "சிருஷ்டிகர்", "ரக்ஷகர்", "தேவன்", "கர்த்தர்" என்னும் வார்த்தைகளுக்கு பொருள் புலப்படுவதில்லை.

எதிர்ப்பு என்பது சிறிதும் இல்லாத வழிகளை நோக்கியே மனிதனுடைய மனேசக்தி தாராளமாய் இயங்கும் இயல்பினதாயிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தன் மனதின் ஆக்கத்திற்கேற்றவாறும், இயல்புக்கொத்தவாறும், தன் அநுபவத்திற் குரியவாறும், தன் பாரம்பரியப்போக்கின்படியும், இன்னும் மனே வித்தியாசங்களுக்கு ஆஸ்பதமான எண்ணற்ற நிலைகளைப் பொறுத்தும்தான் ஆராய்ச்சியால் முடிவுகாண்கிறான். இயற்கை அற்புதங்களுக்கிடையே, தான் இருப்பதைக்கண்டு பேராச்சரியம் அடையும் ஒருவன், உலகம் யாவும் ஒரு திட்டத்தின்படி நடக்கிறது என்று நிர்மானிக்கிறான். அளவிற் கடங்காத ஓர் புருஷன் இந்நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் காரணமாயிருக்கிறான் என்றும், அவன் உறுதி செய்து கொள்கிறான். உலகம் ஒரு பராபர வஸ்துவால் படைக்கப்பட்டு, அதே சக்தியால் ஆட்டுவிக்கப்பட்டு, உலக இயக்கங்கள் யாவும் அதியற்புதமாய்ப் போற்றப்பட்டு, மகா விநோதமாய் ஆளப்பட்டும் வருவதால்தான், அது நன்கமைந்தியங்க ஹேதுவாயிருக்கிறது என்று அவன் நம்புகிறான். ஒரு வஸ்து தன்னைத் தானே சிருஷ்டித்துக்கொள்ள முடியாது என்று அவன் சந்தேகமறத் தெரிந்திருக்கிறான். அதனால் பொருள்களைப் படைக்க ஒரு சிருஷ்டிகர்த்தா இருக்கவேண்டுமென்று அநுமானிக்கின்றான். உலகம் ஒரு திட்டத்தின்படி நிகழ்கிறது என்று முழுவதும் திருப்தியடைகி

றான். ஆதலால் அத் திட்டத்தை வகுத்தவன் ஒருவன் இருக்கத்தான் வேண்டுமென்றும், அவன் திருப்தியடைகிறான். அளவுக்கடங்காத ஒரு மகாசக்தி எதற்காக இருக்கவேண்டுமென்பதின் காரணத்தைப்பற்றி அவன் சிந்தனை செய்வதில்லை. கர்த்தா-இல்லாமல் காரியமில்லையென்பதையும், ஆனால் அத்தகைய கர்த்தாவை சிருஷ்டிக்க ஒருவன் இருக்கவேண்டியது அவசியமில்லையென்றும் அவன் உறுதியாக நம்புகிறான். இத்தகைய ஆதாரத்தை ஒரு சாட்சியமாகவும், கொண்டுவிடுகிறான். வஸ்து சிருஷ்டிக்கப்பட்டதென்றும், ஆனால் வஸ்துவைப் படைத்த சிருஷ்டிகர்த்தா யாராலும் படைக்கப்படவில்லையென்றும் அவன் நினைத்துக்கொள்கிறான். ஊழி ஊழி காலங்களாக ஒரு சிருஷ்டிகர்த்தாயிருந்து வருவதாகவும், அவர் அங்ஙனம் இருந்துவருவதற்குக் காரணம் இல்லையென்றும், அவர் சூன்யத்திலிருந்து "வஸ்து" என்றதை சிருஷ்டித்தார் என்றும், சிருஷ்டி காலத்தில் சூன்யமே இருந்தபடியால், "வஸ்து" என்று நம்மால் சொல்லப்படும் ஏதோ ஒன்றை சிருஷ்டிகர்த்தா முதன்முதலில் உண்டாக்கினார் என்றும், அவன் எண்ணிக்கொள்ளுகிறான்.

மனிதனுடைய மனதிற்கு அளவுக்கடங்காத ஒரு புருடனை சிந்தித்தல் சாத்யமா? அவன் ஆதியற்றதும் அறிவுக்கெட்டாத ஆற்றலும், பேரறிவும், பெருந்தகையுமுடைய ஓர் பெரும் பொருளைச் சிந்திக்க முடியுமா? அத்தகைய ஜீவன் ஒன்று ஒருகாலத்தில் இருந்தது என்றால் அந்த ஜீவனைப்பார்க்கிலும் நீடூழியாய் எப்பொருளும் இல்லாதிருந்திருக்கவேண்டும்.

உலகம் சிருஷ்டிக்கப்பட்டது என்றால், உலகம் சிருஷ்டிக்கப்படாத காலம் ஒன்று இருந்திருக்கவேண்டும். அல்லது உலகம் சிருஷ்டிக்கப்படுமுன் நீடூழியாக அத்தகைய பரம புருஷனைத் தவிர வேறு யாதொரு பொருளும் இருந்திருக்க முடியாது. நீடூழிகாலம், எல்லையில்லாத அறிவுப் பொருள் ஒன்று, எல்லையில்லாத சூன்யத்தில் சலனமற்று எவ்வாறு இருத்தல் முடியும்? அவ்வாறு இருந்தால் அப்பொருள் எவ்வாறு அறிவுடைய பொருளாகும். தனது ஞானத்தைக்கொண்டு உணர அவ்வநாதிகாலத்தில் அங்கு எப்பொருளிடமிருந்து அது வந்தது? அப்போது ஒரே ஒரு பொருள்தான் உணரப்படுவதற்குயிருந்தது; அது என்னவெனில் மனதிற்கும், அறிவிற்கும் எட்டாத பரம்பொருளே என்றால், அத்தகைய பொருளுக்கு சக்தி என்பது எது? அவ்வாறிருப்பின் அப்பொருள் எப்பொருள் மீது வன்மையைக் காட்ட முடியும்? ஒரு எண்ணத்தைத் தோற்றுவிக்க அங்கு யாதொரு பொருளும் மிருந்ததில்லை. அளவற்ற-அறிவிற்கு அடங்காத சூன்யத்திற்கு ஏற்பட்ட சம்மந்தத்தைத் தவிர வேறு யாதொருவிதமான சம்மந்தமும் மிருந்திருக்க முடியாதென்றால் சிருஷ்டித்தொழிலின் பெரிய கஷ்டம் அடுத்தபடியாக தோன்றக்கூடும். ஒன்றுமற்ற சூன்யத்திலிருந்து வேறு ஒன்றை சிருஷ்டிக்க முடியுமா? முடியுமென்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. காரணம் ஏதுமில்லாமல் ஏதேனும் ஒன்று தோன்றியிருப்பது சாத்தியமானது என்பதை, நம்ப முடியாது. நான் இன்னமும் கூறவேண்டுமானால் காரணமின்றி ஒரு பொருளைச்சிருஷ்டிக்க முடியும் என்பதை நம்புவது எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டம் காரணத்தோடு ஒரு

பொருளை சிருஷ்டிக்கப்படுவதும்—நம்புவதுமாகும். ஒரு காரணத்தை ஏற்படுத்திக் கொள்வதினாலேயே உண்மையை உணர்வதில் நமக்குள்ள கஷ்டம் குறைந்துவிடப் போவதில்லை. கல்லைத் தூளாக்கலாம். அத்தூளை நுண்ணியதாக அரைத்துவிடலாம். அதை மேலும், மேலும் அணுவாக நுறுக்கி அதைச் சக்தியுள்ள பூதக் கண்ணாடிமூலமே பார்க்கத் தக்கதாக பொடிக்கலாம். இதே அணுவை மறுபடியும் மறுபடியும் நாம் மகா நுண்ணிய பரமாணுக்களாக்கலாம். ஆனால் நாம் அறியக்கூடிய அத்தகைய பரமாணுவின் ஒரு மிக நுண்ணிய ஒரு பாகத்தையும் இல்லாமலே செய்துவிட ஒருக்காலும் எவராலும் முடியாது. ஆகையால் சிருஷ்டித் தொழில் என்பது இன்னது என்பதை என்னால் அறியக் கூடவில்லை. இக்குறிப்பிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால் சங்காரம் செய்யப்படுவதற்கு லாயக்குள்ள பொருள்கள் சிருஷ்டிபண்ணப்பட்டிருக்கமுடியாது என்ற பொதுவான முடிவுக்கு வருவது மிகச் சுலபம் என்பதே.

இக் கேள்விகளுக்குத் தனிப்பட்ட ஒவ்வொரு நபர்களாலும் பதில் சொல்லமுடியும். ஆயினும் அப் பதில் யாவும் அவரவர்களுடைய மனோபீஷ்டத்தைப் பொறுத்தும், அனுபவத்தைப் பொறுத்தும், சிந்தனை வழக்கங்களைப் பொறுத்தும், அறிவைப் பொறுத்தும், அறியாமையைப்பொறுத்தும், துவேஷ புத்தியைப்பொறுத்தும், நுண்ணறிவைப் பொறுத்துமிருக்கிறதென்பது வெளியாகும்.

அநேகமாய் மக்கள் கூட்டத்தில் பெரும்பாலானவர்கள் தெய்வங்கள் என்பவைகள் ஏதோ இருப்பதாகவே

நம்பிக்கொண்டிருக்கிறார்கள். நாகரிகம் வாய்ந்த மக்கள் எனப்படுவோரில் பெரும்பான்மையினர் அப்பாலுக்கப் பாலாயுள்ள ஏதோ ஒரு அநீதப்பொருளில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். சிந்தனை உலகத்தில் பெரும்பாலான மக்கள், விஷயத்தின் உண்மைகளை உணர்வதில்லை. ஒவ்வொரு மூளையும் ஒவ்வொரு ராஜ்யம் என்பதும், ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு அரசன், என்பதும் அறியத்தக்கவை.

உலகம் முழுவதும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒன்றை ஒரு மிக்க நம்பிவிட்டதனால் அவ்விஷயத்தின் உண்மையை ருஜுப்படுத்துவதற்கான ஒரு வழியும் ஏற்படப்போவதில்லை. உலக மக்களில் பெரும்பான்மையோர் கடவுள் என்ற விஷயத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதுபோலவே பெரும்பான்மையான மக்களுக்கு பேய்கள் என்ற விஷயத்திலும் கண் மூடித்தனமான நம்பிக்கையிருந்து வருகிறது. கடவுள் என்ற விஷயமும், பேய் என்ற விஷயமும், இடி, புயல், கொடுநோய் முதலிய இயற்கையின் நிகழ்ச்சியால் பண்டைக்கால மக்களுக்கு விளைந்த பீதிகளினின்றெழுந்தவை. அவை மக்களின் அறியாமை, பயம், சுயநலம் முதலியவைகளால் பெரும்பாலும் உண்டாக்கப்பட்டவை. மனிதன் தோன்றின அவ்வக்காலங்களில் அவன் உயிர்ப்பு மரணம், பொருள், சக்தி, பொருள்களின் ஒடுக்கம், பெருக்கம், பூமி, நக்ஷத்திரம் முதலியவைகளின் அற்புதங்களுக்குக் காரணங்காண முயற்சி செய்து கொண்டே வந்திருக்கிறான். குகையில் வசித்து வந்த காட்டு மனிதன் கிழங்குகளையும், மிருகங்கள், பட்சிகள் முதலான

வைகளை கம்பாலும் கல்லாலும் அடித்துக்கொன்று தின்று ஜீவித்து வந்திருக்கிறான். அவனைச் சுற்றிலும் அவனுக்கு நடுக்கத்தை உண்டாக்கக்கூடிய பொருள்கள் ஏராளமாய் இருந்து வந்தன. அவன் ஆற்றோரங்களில் நின்றுகொண்டு அதைப்பார்க்கும் போது அதற்கு ஆரம்பமும், முடிவும் இல்லாததுபோல் தோன்றி ற்று. அவன் கடற்கரையில் நிற்கும் போது ஒரு கரை யே அவனுக்குத் தோன்றிற்று. அவன் தன்னைவிட மிகப்பெரிய பிராணிகளுக்கு, தான் இரையாகவேண்டிய வனாக இருந்ததைஉணர்ந்தான். அவன் விசித்திரமான நோய்களுக்கும், மிகப் பயங்கரமான துன்பங்களுக் கும் மனிதன் ஆளாக நேரிடுவதையும் தெளிவாய் அறிந்தான். இடியின் முழக்கத்தைக் கண்டு அவன் நடுநடுங்கினான். மின்னலின் பிரகாசத்தால் பார்வை இழக்க நேரிடுவதையும், தனக்குக் கீழே பூமி ஆடுவதை யும் நன்றாய் உணர்ந்தான். ஆகாயம் எரிமலையின் கொடிய ஜுவாலைகளுடன் விகாரமாய் இருப்பதை கண் டான். தனது சக்திக்கு மேம்பட்ட இவ்வியற்கைகளைக் கண்டுமிரண்டு சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து அவை களைப் பணிந்தான். பின்னர் தன்னால் அறியமுடியாத ஒரு பொருள் இருந்து இவைகளைச் செய்து வருவதாக எண்ணி அது தன்னைக்காப்பாற்ற வேண்டுமென்று மன்றாட ஆரம்பித்தான்.

காட்டு ஜாதியார்களாய் நீண்டஇராக்காலங்களி லும், கொள்ளைநோயும், பஞ்சமும், வியாபித்திருக்கும் காலங்களிலும், சுகமற்ற நீண்ட பனிக்காலத்தினூடேயும் மனிதர்கள், காரிருள் நிறைந்த குகைகளில் படுத்துக்

டெந்தகாலத்திலும் மூடநம்பிக்கை விதைகள் மனிதனு டைய மூளையில் விதைக்கப்படலாயின. காட்டுமனிதன் ஒவ்வொன்றும் தன் நிமித்தமாகவே சம்பவித்து வந்த தாக நம்பினான். அத்தகைய நம்பிக்கை அவனுக்குச் சம்பூரணமாய் இருந்துவந்தது. தன்னால் காணப்படுவ தற்கிபலாத ஒரு சக்தியின் கோபத்தை அவன் தன் செய லினால் தூண்டிவிட முடியுமென்றும், தன் வணக்கத் தால் அதைச் சாந்தப்படுத்த முடியுமென்றும் அவன் நிச் சயமாய் நம்பிவந்தான்,

ஆகவே அவன் வின் புகழ்ச்சியிலும், பிராத்தனை களிலும் இறங்கினான். இக் கடவுளைப்பற்றிய தன் கருத் தைத் தன் சக்திக்கேன்ற அளவில் கல்லில் வைத்துக் காட்டினான். மரத்தில் வேலைப்பாடில்லாமல் செதுக்கிக் காட்டினான். அந்த விக்கிரகத்திற்கு குடிசையைக் கட்டினான். பின்பு ஒரு குச்சுக் கட்டினான். கடைசியாக ஒரு கோவில் கட்டினான். இவ்விக்கிரகங்களின் முன்னே நின்று அவன் தலைவணங்கிப் பணிந்தான். தன் பொருளை வாரி வாரிச்செலவிட்டுக் கட்டின இக்கோவில்களில், தன க்கும் தன் அன்பிற்குரியவர்களுக்கும் பாதுகாப்பு நாடி னான். அவ்வக்காலங்களில் அறியாமை மிகுந்தவர்கள் அநேகர் இருந்தார்கள். அறியா மாந்தரை, சிலர் தங் கள் சொந்த நன்மையின்பொருட்டு உபயோகிக்கலாயி னர். அறியப்படுவதற்கு முடியாத தெய்வத்தினிடமி ருந்து தங்களுக்கு ஏதோ சங்கதிகள் வந்ததாக அவர் கள் பாசாங்குசெய்துகாட்டினார்கள். உதவியற்ற ஜனங் களுக்கும் தெய்வங்களுக்கும் நடுவே அவர்கள் நின்றவர்க ளானார்கள். அவர்களே சமாதானக் கொடியை உயர்த்து

பவர்கள் ஆனார்கள். விண்ணுலகின் நீதிஸ்தலத்தில் அவர்கள் மனிதர்களுடைய வாதங்களைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறவர்கள் (வக்கீல்கள்) என்று கருதப்பட்டார்கள். ஏமாந்த மக்கள் அவர்களுக்காக உழைத்தார்கள். அவர்கள் அவ்வுழைப்பினால் வாழ்ந்துவரலானார்கள்.

தற்கால கிறிஸ்தவன் ஒரு காட்டு மனிதன் விக்கிரக ஆராதனை செய்ததைக் கண்டு ஆச்சரியப்படுகிறான். ஆயினும் தற்கால கிறிஸ்தவர்களுடைய கடவுள், பக்தர்களின் பிரார்த்தனைகளைஎப்படி அங்கீகரித்து இன்று எப்படித் தன் பக்தர்களைக் காப்பாற்றுகிறதோ, அப்படியேதான் அக் காலத்திய காட்டுமனிதரின் கல்லு சாமிகளும் தன் பக்தர்களின் வணக்கத்தை ஏற்று, அவர்களைக் காப்பாற்றி வந்தது என்ற விஷயம் ஒப்புக்கொள்ளப்படவேண்டியதுதான்.

வஸ்து (Matter) என்பது நிரந்தரமானதுஎன்ற சித்தாந்தத்தை நான் கடைப்பிடித்தவன். பிரபஞ்சத்திற்கு ஆரம்பம் இருந்ததில்லை. அதற்கு ஒரு முடிவும் இருக்கப்போவதில்லை. உலகம் ஆதி அந்தமற்ற ஓர் பொருள். ஒன்றை ஒன்று பற்றியிருக்கும் நிலை சாஸ்வதமற்றது. அது தோன்றி மறையும் இயல்புடையது. உயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டுப் பின் மறைந்து போகின்றன. உயர்திணைப் பொருள்களின் உருவமும் அஃறிணைப் பொருள்களின் உருவமும் மாறுந்தன்மையன. ஆனால் ஆக்கப்படும் வஸ்துக்களாகும் மூலப்பொருள்கள் அநாதியான கால ஆயுளைக்கொண்டது. அதற்கு அழிவென்பதே கிடையாது. கிரகங்கள் தோன்றி அழியலாம். அளவுகாண முடியாத ஆகாய மண்டலத்தில்

எண்ணற்ற நக்ஷத்திரக் கூட்டங்கள் ஒளியிழந்துமழுங்கி ஒழியலாம். எண்ணற்ற சூரியர்களுக்கு உஷ்ணமில்லாது போய்விடலாம். ஆனால் வஸ்து என்பது மீந்திருக்கும். ஆதி அந்தம் என்ற விஷயங்களை நிர்ணயிப்பது தற்போதைய மானிட மனோ சக்திக்கு அப்பாற்பட்டது என்று தோன்றுகிறது.

பாரம்பரைப்பாத்தியம் என்பது மூடநம்பிக்கையின் பக்கமே சென்று கொண்டு வருகிறது. நம்முடைய அறியாமைமுழுவதும் பழைய காலத்தவர்களுக்கே நியாயம் பேசமுன்வந்து விடுகிறது. அநேக மனிதர்கள் தங்களுடைய முன்னோர்கள் மிகுந்த சிலாக்கியமானவர்களாயிருந்தார்கள் என்றும், அவர்கள் வீரர்களாயும் அறிஞர்களாயுமிருந்தவர்கள் என்றும் ஒருவித உணர்ச்சி உடையவர்களாக இருக்கிறார்கள். மத சம்மந்தமான எல்லா விஷயங்களிலும் அவர்களுடைய தீர்மானங்களையே பின்பற்ற வேண்டுமென்ற கொள்கையை அவர்கள் கொண்டவர்கள். அவர்கள் தங்களுடைய தந்தையரும் தாயாரும் மிக உயர்ந்தவர்கள் என்றும், அவர்களுக்கு எந்த விஷயங்கள் திருப்தி அளித்தனவோ, அதே விஷயங்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கும் திருப்தி அளிக்கும் என்றும் அவர்கள் நம்பியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தாய் அனுஷ்டித்த மதம் தங்களுக்கும் போதுமான அளவு பரிசுத்தமானதுதான் என்றும், அதுபோதுமான அளவு பகுத்தறிவுக்கு உகந்ததுதான் என்றும் மிக மரியாதையான உணர்ச்சியோடு சொல்லுகிறார்கள். இவ்விதமாக மக்களுக்குள் முன்னோர்களுக்குச் செலுத்தும் மரியாதையும், அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்

குக்காட்டும் அன்பும் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களுடைய பகுத்தறிவை அழித்து, அவர்களுடையமனக்கண்களின் ஒளியை மிகமிக மழுங்கச்செய்து விடுகின்றன.

தங்களுடைய பெற்ருேர்கள் வாழ்ந்து இறந்த இடத்திலேயே தாங்களும் வசித்து இறந்துபோகவேண்டுமென்ற ஓர்வித ஆசை வயோதிகர்களுடைய மனதில் இருந்துவருவதைக் காண்கிருேம். அவர்களது நோக்கம் தங்கள் வாலிபகாலம் கழிக்கப்பட்டவிடங்களுக்கு செல்லுகிறது. ஆண்மையென்ற மரத்தைச் சுற்றி இத் திராட்சைக் கொடிகள் பற்றிவளர்ந்து படருகின்றன. ஆயினும் என் தாயார் அனுஷ்டித்துவந்த மதம் எனக்குப் போதுமானதேயாகும் என்று சொல்லுவது என் தாயார் காலத்திய பூகத்துவசாஸ்திரமோ, அல்லது வானசாஸ்திரமோ, அல்லது தத்துவ சாஸ்திரமோ எனக்குப் போதுமானது என்று சொல்வதுபோலாகும். மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தன்னால் சம்பாதிக்கக்கூடிய மிக உயர்ந்த எந்தப் பொருளுக்கும் பாத்தியம் உடையவர். தாயார் அனுஷ்டித்து வந்த மதத்தில் ஒரு சிறிய முன்னேற்றம் இருப்பதாயினும், மகனுக்கும் அந்த முன்னேற்றத்தில் பாத்தியம் உண்டு மகன் அந்த சகாயத்தை இழக்கக் கூடாது. மகன் தன் தாயினிடமிருந்து பெற்றதை அவனுடைய அறியாமை மிகுந்த குற்றங்களோடேயே மிக மரியாதையுடன் போற்றிவரக் கடமைப்பட்டிருக்கிருன் என்று தவறுதலாய் நினைத்தல்கூடாது.

நாம் நம்முடைய தாய் தந்தையரின் மதத்தைப் பின்பற்றவே வேண்டுமென்ருல் நம்முடைய தாய் தந்தையர்

தங்களுடைய தாய் தந்தையர்களின் மதத்தைப் பின்பற்றியிருத்தல்வேண்டும். இவ்விதம் நிகழ்வதானுல் சிந்தனு உலகத்தில் முன்னேற்றம் என்பதே இருக்கமுடியாமற் போம். முதன் முதலாகத் தோன்றிய மதமே கடைசி மதமாக அமைந்துவிடும். தாய் எவ்வளவு அறியாமையோடு இறந்தாளோ, அதைப் போலவே குழந்தையும் அவ்வறியாமையோடே இறக்கும். அபிவிருத்தி என்பது முடியாததாகும். முன்னேர்களுடைய கல்லறைகளின்மேல் மானிடவர்க்கத்தின் அறிவு விளைதத்தம் செய்யப்பட்டுப் போகிறது.

ஜாதியார்களுக்குள் மதம் இருந்திருக்கிறது. வகுப்பினர்களுக்குள் மதம் இருக்கிறது. ஜன சமூகங்களுக்குள் மதம் இருக்கிறது. ஜாதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும், வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொருவரும், சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நகரவாசியும் தன் தன் மதமே மற்ற எவருடைய மதத்தையும்விட உயர்ந்தது என்று வற்புறுத்தவேண்டியது தனது கடமை என்ற ஒரு உணர்ச்சியைக் கொண்டிருக்கிறுன். இவ்வுண்மையை நாம் அறிந்தே இருக்கிறேம். வேறு மதங்களில் ஏற்படும் துவேஷமும், ஜாதி அகங்காரமும், சமூக ஆணவமும் அவ்வவ்விடங்களில் வியாபித்திருக்கும் மக்களுடைய மூட நம்பிக்கைகளுக்குச் சாதகம் செய்யக்கூடியவைகளாகவே இருக்கின்றன. இவ்விஷயங்களையும் நாம் அறிந்திருக்கிறேம். மற்ற ஜனசமூகங்களின் மதங்களைப் பற்றிக் குறை கூறித் தன் சொந்த மதத்தை உறுதியாய்ப் பற்றி நிற்றலே ஒவ்வொரு நகரவாசியின் தேசாபிமானமாயிருந்துவந்திருக்கிறது-இருக்கின்றது. மனிதர்களிடத்

னில் ஒருவித விசேஷமிருக்கிறது. ஒருவனுக்கு மற்றமதங்களின் கோளாறுகளைத் தெரிந்துகொள்ள முடியுமேதவிர தன் சொந்த மதத்தின் கோளாறுகள் அவன் கண்களுக்குத் தெரிவதேயில்லை. ஒரு கிறிஸ்தவனுக்கு முஹம்மது ஒரு மோசக்காரன் என்று தாராளமாய்த் தோன்றுகிறது. அவன் அதைப்பற்றி நிச்சயமாய்த் தெரிந்திருக்கிறான். முஹம்மதை மக்காவில் நன்கு தெரிந்திருந்தவர்கள், அவர் ஒரு தீர்க்கதரிசி அல்லவென்று பகிரங்கமாய்க் கூறினார்கள். இப் பிரகடனத்தைக் கிறிஸ்தவர்கள் முஹம்மது கடவுளின் அருள் பெற்றவர் அல்லவென்பதற்கு ஒரு ஸ்திரமான அத்தாட்சியாக வைத்துக்கொண்டார்கள் என்றாலும், இதே கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு நன்கு பழகியிருந்த எருசலேம் ஜனங்கள், கிறிஸ்துவை அங்கிகரித்துக்கொள்ள மறுத்தார்கள் என்பதை ஒப்புக்கொண்டாலும் அக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை கடவுளுடைய புத்திரன் என்பதை ஸ்தாபிக்க அம் மறுப்பையே ஒரு ருஜுவாக வைத்துக்கொண்டார்கள்.

பொதுவாக மனிதன் ஒவ்வொருவனும் தன் தன் தேசத்தின் மதத்தையே தழுவுகிறான். இல்லையென்றால் அவனுடைய தேசத்தின் மதம் அவனைத் தழுவிக்கொள்ளுகிறது. அவனுக்கு ஜாதி அகங்காரமும், தன் சமூக ஆணவமும், தேசாபிமானம் என்ற துவேஷமும் வியாபித் தொழுகும். அவனுக்குப் பகுத்தறிவு வேலை செய்யாது; வெறும் உணர்ச்சிதான் இருக்கும். அவன் ஆராய்ச்சி செய்யவே மாட்டான். வெறும் நம்பிக்கையைத்தான் அவன் பற்றி

யிருப்பான். அவன் மற்ற ஜன சமூகங்களின் மதங்களை ஆபாசமாகவும், மிகக் கேவலமாகவும் மதிக்கிறான். அவர்களுடைய தெய்வங்களை அறியாமைப் பூதங்களாக வும், கொடுமைப் பேய்களாகவும் கருதுகின்றான். ஒவ் வொரு தேசத்திலும் இத்தகைய மனிதர்கள் உண்டு. மனிதனுக்குக் கற்பிக்கப்படும் முதல் பாடம் முழு முதற் கடவுள் ஒன்று உண்டு என்பது; இரண்டாவது பாடம், அக்கடவுள் தன் இஷ்டத்தை மக்களுக்கு வெளி யிட்டிருக்கிறார் என்பது; மூன்றாவது, உண்மையான நம்பிக்கை உள்ளவர்களுக்கு அவர் பரிசளிக்கிறார் என் பது; நான்காவது, நம்பிக்கையில்லாதவர்களையும், ஈன னஞ் செய்கிறவர்களையும், பக்தியற்ற பேச்சுடையவர்களை யும் அவர் தண்டிப்பார் என்பது; ஐந்தாவது, சில சடங் குகள் கடவுளுக்கு இன்பகாமாயிருக்கின்றனவென்பது; ஆறாவது, அவர் கோவிலை ஏற்படுத்தினார் என்பது; ஏழா வது, பூசாரிகள் பூமியில் அவருடைய பிரதிநிதிகள் என் பது. பொதுவாக மனிதன் தன் சமூகக்கடவுள் உண்மை யான கடவுள்தான் என்று நிரூபிப்பதில் கஷ்டப்படுவ தில்லை. இந்தக் கடவுளின் விருப்பங்கள் புனிதமான தன் தேசச் சுருதிகளில் அடங்கியிருக்கின்றனவென அவன் நினைக்கிறான். அவன் தன்னை உண்மையான நம் பிக்கை உடையவனாகக் கருதிக்கொள்ளுகிறான். ஏனைய மதங்களில் நம்பிக்கையுடைய வேறு சமூகத்தினர் ஈன னஞ் செய்கிறவர்கள் என்று அவன் எண்ணுகிறான். தான் எந்த மதப்பிரிவைச் சேர்ந்தவனாக இருக்கிறானோ, அந்த மதப்பிரிவு ஒன்றுதான் உண்மையானது என்று அவன் நம்புகிறான்; தன் தேசத்துப் பூசாரிகள்தான் அந்த உண்மையான கடவுளோடு மிகக் குறைந்த செல்

வாக்காவது உடையவர்கள் என்று அவன் எண்ணு கிறான். இத்தகைய ஆபாசங்கள் எல்லாம் பொதுவாகவே எல்லாமனிதரிடமும் தானே தோன்றி,இருந்துவருபவை. ஆதலால் அவன் மற்ற மதக் கோட்பாடுகளையெல்லாம் அருவெறுக்கிறான். அவன் தன்னை அந்த உண்மையான ஒரேகடவுளுக்கு வேண்டியவன் என்று தன்னையே ஆசிர் வதித்துக்கொள்கிறான்.

ஒரு கிறிஸ்தவன் துருக்கியில் பிறந்திருந்தால், அவன் முஸல்மானுகியிருப்பான். ஒரு முஸல்மான் புதிய இங்கிலாந்தில் பிறந்து அந்தோவரில் கல்வி பயின் றிருந்தால் கிறிஸ்துமதத்தையோ, பிற மதத்தையோ தழுவாதவர்களை உதவாமல் கழிக்கப்பட்டவர்கள் என்று கொள்ளாமல், அவர்களை மிகுந்த சந்தோஷத்திற்குரிய சேதியளிக்கக்கூடியவர்கள் என்று நினைத்துக்கொள்ளு வான்.

ஜனசமூகத்தினரிடம் வழி மீறிப்போகும் குண முண்டு. அவர்களிடம் பிரத்தியேகமான குண விசேஷ ங்களும்உண்டு. அவர்களிடம் மனோ ஜாலப்பிரமைபற்றிய இயல்புகளும் உண்டு. இவையாவும் அவர்களுடைய நாட்டுச் சட்டங்களிலும், வழக்கங்களிலும், சடங்குகளி லும், ஒழுக்க முறைகளிலும், மதங்களிலும் இடம் பெற்று விடுகின்றன. நாட்டின் நில இயல்பும், சீதோஷ் ணமும், மற்றும் புழுப்பூச்சிகள், தனிப்பட்ட மக்கள், ஜனசமூகங்கள் முதலியவைகளின் வாழ்க்கைகளையும், வழக்கங்களையும் உருவாக்கி வியாபிக்கச் செய்யத்தக்க எண்ணற்ற நிலைமைகளும், அவைகளை எற்படி நிர்ண

யித்து விடுகின்றன. ஒரு மனிதன் தன் தேசத்து மதத்தில் முழு நம்பிக்கை வைத்து விடுகிறான். ஏனென்றால் அவனுக்கு வேறு எந்த மத விஷயமும் தெரியாது என்பதாலே. வேறு எந்த மதத்தைப்பற்றியும் அறிந்து கொள்ள அவனுக்கு ஆசைகிடையாது. அவனுடைய மதமே அவனுக்குப் பிடித்தமானதாகி விடுகிறது. ஏனென்றால் அவனுக்கு அம்மதம் பிடித்தமாகும்படி அவன் கோமைலான கொள்கைகளில் தயாரானவனாயிருக்கின்றான். தனக்கு அம்மதம் பிடித்தமானதாக இருக்கிறது என்ற விஷயத்தை அவன் ஏதோ விசேஷ உயர்வு பற்றியதாக எண்ணிக்கொள்ளுகிறான். தான் அம்மதத்திற்குத் தகுதி பெற்றவனாயிருப்பதாக நினைப்பதை தேவ அருளின் உண்மைக்கு அறிகுறியாகக்கொள்ளுகிறான்.

ஒரு மனிதனுக்கு தன் சொந்த தேசமதமாகிய தாய் தந்தையரின் மதத்தைப்பரிசை செய்யவும், அதை ஆராய்ந்தறியவும் உரிமை இருக்கிறதா வென்பதே நமது கேள்வி. எத்தேசத்துநகரவாசிகளுக்கும் இத்தகைய உரிமை இருக்கிறதென்று கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு இந்த உரிமை இருக்கிறது என்று சொல்லப்படுவதுமல்லாமல், அவர்கள் தங்கள் சொந்த மதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டுமென்பது கிறிஸ்துமதக் கொள்கை. அது, அவர்களுடைய உத்தமமான கடமையுமாகும். ஆனால் கிறிஸ்தவர்கள் மட்டும் தங்கள் சொந்த மதத்தைப்பற்றி பரிசை செய்வது கிடையாது. கிறிஸ்தவர்கள் அல்லாத பிற மதஸ்தர்கள் இருக்கும் தேசங்களுக்கு ஆயிரக்கணக்கான பாதிரிகள் அனுப்பப்படுகிறார்கள். மற்ற மதங்களில் நம்பிக்கை பெற்றிருப்பவர்களைக் கிறிஸ்து மதத்

நிற்கிழுப்பது அவர்களுடைய வேலை. அவர்களுடைய மூட நம்பிக்கைகளைப் பரிசை செய்வதும், அவைகளை விட்டொழிக்கச்செய்வதும், தங்களுடைய மதத்தைத்தழுவச் செய்வதும் பாதிரிகளின் முழுவேலையாகும். கிறிஸ்து மதமல்லாத பிறமதங்களைச் சேர்ந்தவர்கள் யாவரும் தம் தம் தேச மதத்தை அவமதிக்கவேண்டுமென்பது அவர்களின் (பாதிரிகளின்) கடமையாகும். கிறிஸ்தவரல்லாதார் ஒவ்வொருவரும் தம் தம் பெற்றோர்களின் மதக் கோட்பாடுகளை வெறுத்துத் தள்ளும்படி செய்வதே கிறிஸ்தவர் தமது கடமையாகக் கொள்ளவேண்டும். கிறிஸ்து மதமல்லாத வேறு மதங்களைச் சேர்ந்த குடிகளுக்குத்தங்கள்தங்கள் மதத்தின் அஸ்திவாரங்களைச்சோதித்து அறியஉரிமை உண்டு என்றால், கிறிஸ்தவ ஜனசமூகத்திற்கும் அதே உரிமை இருக்கவேண்டுமென்பது நியாயமேயாகும். ஆயினும் கிறிஸ்தவர்கள் இன்னும் மேலே போகிறார்கள். அவர்கள் தங்களுடைய புற மதஸ்தர்களை நோக்கி, "நீங்கள் உங்களுடைய மதத்தைச் சோதிக்கவேண்டும். அத்துடன் நீங்கள் நின்றால் போதாது. அதை நீங்கள் மறுத்தும் விடவேண்டும். நீங்கள் அதை மறுத்து விட்டு, அத்துடன் எங்களுடைய மதத்தையும் தழுவாவிடின், உங்களுக்கு எக்காலத்திலும் விமோசனம் என்பது கிடைக்காது", என்கிறார்கள். இதே கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ நாட்டு மக்களை நோக்கி, "நீங்கள் சோதனை ஒன்றும் செய்தல் கூடாது. நீங்கள் ஆராய்ச்சித் துறையில் இறங்குதல் கூடாது. ஆனால் நீங்கள் சோதித்தாலும் சும்மா இருந்தாலும், உங்களிடம் நம்பிக்கை இருக்கவேண்டும். இல்லையானால் உங்களுக்கு விமோசனம் ஒருகாலத்திலும் இல்லை" என்று கூறுகிறார்கள்.

உண்மையான மதம் என்று ஒன்று இருந்தால், எல்லா மதங்களிலுமிருந்தும் அந்த உண்மையான ஒரே மதத்தைத் தேர்ந்தெடுப்பது எங்ஙனம்? அதற்கு ஒரே ஒரு வழி உண்டு. நாம் எல்லோருடைய பாத்தியதைகளையும் பட்சபாதமின்றி பரிக்ஷிக்கவேண்டும். ஆராய்ச்சிக்குரிய முறைமையில் காணப்படும் முடிவுக்கேற்ப விஷயத்தைக்கொள்ளவோ அல்லது தள்ளவோ வேண்டிய அவசியம் கலந்தே இருக்கும். ஆராய்ச்சியில் விஷயத்தைக் கொள்ளவோ அல்லது தள்ளவோ வேண்டிய உரிமை மட்டும் இருப்பதாக நினைக்கவேண்டாம். ஆனல் அங்ஙனம் செய்யவேண்டிய அவசியமும் இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். என் அபிப்பிராயம் அதுதான். இத்தீர்மானத்திலிருந்து யாரும் தப்பிவிட முடியாது. நமக்குப் பரிசை செய்ய உரிமை இருக்கிறது என்றால் நாம் கண்ட முடிவை வெளியிடவும் நமக்கு உரிமை உண்டு. கிறிஸ்தவர்கள் மற்ற மதங்களை ஒருவாறு ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றி அவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் முடிபுகளை வெகு சுதந்திரத்தோடு வெளியிடுகிறார்கள். அதாவது அம்மதங்களை எல்லாம் அவர்கள் பொய்யானவைகள் என்றும், மோசடியானவை என்றும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய கடவுள்களை விக்கிரகங்கள் என்றும், மதங்களைக் கட்டுக்கதைகள் என்றும், பூசாரிகளை மோசக்காரர்கள் என்றும் கூறியிருக்கிறார்கள்.

கிறிஸ்தவன்—குர்ஆன், படிப்பதற்குத் தகுதியுள்ளதென்று நினைப்பதில்லை. ஆயிரம் கிறிஸ்தவர்களில் சுமார் ஒருவன்கூட அதன் பிரதி ஒன்றைப்பார்த்திருக்க

மாட்டான். அப்படியிருந்தும் குர்ஆன் என்பது ஒரு மோசக்காரன் எழுதி வைத்தது என்று எல்லாக் கிறிஸ்தவர்களும் பூரண திருப்தி கொண்டிருக்கிறார்கள். இந்து மதக் கோட்பாடுகளை எல்லாம் ஆராய்ச்சி செய்யவேண்டுவது நியாயமென்று ஒரு கிறிஸ்தவனும் நினைப்பதில்லை. ஆனால் அவர்கள், பிராமணர்கள் யாவரும் தவறிழைத்தவர்கள் என்று கருதுகிறார்கள். அவர்களுடைய அற்புதச் செயல்கள் எனப்படுபவை எல்லாம் வெறும் பொய்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். புத்தருடைய வாழ்க்கைச் சரித்திரத்தை ஒரு கிறிஸ்தவனும் படிக்கக் கவலை கொள்வதில்லை. கன்பூஸியஸ் என்னும் சீன தத்துவ சாஸ்திரியின் கோட்பாடுகளை ஒரு கிறிஸ்தவனும் ஆராய்ந்து பார்த்தறியான். கிறிஸ்தவன் என்பவன் எப்பிரிவைச் சேர்ந்தவனாயிருந்தாலும் அவன் உண்மையான மதம் கிறிஸ்து மதம் ஒன்றே என்று வைத்துக் கொள்ளுகிறான். கிறிஸ்து மதமொழிந்த மற்றைய மதங்கள் யாவும், அறவே அஸ்திவாரம் அற்றவை என்று அவன் எண்ணிக்கொள்ளுகிறான். இந்துக்கள் செய்து கொள்ளும் பிரார்த்தனைகளுக்கெல்லாம் பரிகாரங்கள் கிடைப்பதேயில்லை என்றும், எகிப்திலும், கிரீசிலும், ரோமிலும் உள்ள எண்ணற்ற பலி பீடங்களில் செய்யப்படும் பலிகளுக்கெல்லாம் எவ்வித பலனும் ஏற்படுவதில்லை என்றும், கிறிஸ்தவ உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது. வன்மை மிக்க ஜனசமூகங்ளெல்லாம் தங்கள் கடவுள்களை வீணே வணங்கிவந்தார்கள் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அவர்களுடைய பூசாரிகள் எல்லாம் பிறரை வஞ்சிப்பவர்கள் என்றும், அல்லது அம்மதஸ்தர்கள் ஏமாந்தவர்கள் என்பதும் அவர்களுடைய எண்ணம்.

அவர்களுடைய சடங்குகள் கொடுமை மிகுந்தவை என்பதும், அர்த்தமற்றவை யென்பதும் அவர்களுடைய முடிபு. அவர்களுடைய கோவில்கள் அறியாமையினலும், அயோக்யெத்தனத்தாலும் கட்டப்பட்டவை என்பது அவர்களுடைய துணிபு. கடவுள் அவர்களுடைய பிரார்த்தனைக் கீதங்களையும், துன்பமுறைபிடுகளையும், வந்தன வாழ்த்துக்களையும் பொருட்படுத்திக் கேட்பதில்லை யென்பது அவர்களுடைய தீர்மானம். அவர்களுடைய மதத்தின் பொருட்டு கொள்ளைநோய் நின்றதில்லை யென்பது அவர்களுடைய கருத்து. பூகம்பமும், எரிமலையும், வெள்ளமும், புயலும், தம்தம் மாணவழியினூடேயே செல்லுகின்றன வென்பது அவர்களுடைய எண்ணம். உண்மையான கடவுள் அவர்களுடைய துன்பங்களைக் கண்டு நகைத்து, அவர்களுடைய பயங்களைக்கண்டு எள்ளனஞ்செய்கிருர் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

ஜனசமூகங்களின் க்ஷேமம் அவர்களுடைய மதத்தைப் பொறுத்ததல்ல. அது எதோ ஒரு கடவுளின் நற்குணத்தைப் பொறுத்ததுமல்ல. அது ஒரு கடவுளின் எவ்வித எற்பாடுமல்ல. ஆனல் ஜனசமூக க்ஷேமம் பூசாரத்தின் இயல்பைப் பொறுத்தும், நாட்டின் சிதோஷ்ணஸ்திதியைப் பொறுத்தும், ஜனங்களின் வர்த்தகத்தைப் பொறுத்தும், சுகாதார வசதியைப் பொறுத்தும், அவர்களுடைய நுண்ணறிவைப் பொறுத்தும், உழைப்பைப் பொறுத்தும், மக்களின் ஊக்கத்தைப் பொறுத்தும், மனேவளர்ச்சியைப் பொறுத்தும், மக்களின் கல்வி விருத்தியைப் பொறுத்தும், சிந்தனையிலும் செயலாற்றுதலிலும் மக்களுக்குள்ள சுதந்தரத்தைப் பொறுத்தும் மேம்பாடடையும் இயல்பினது. இத்தகைய

வலிமைமிக்க தேசிய வாழ்க்கைக் காட்சியில் பகுத்தறிவு ஆக்க வேலையையும், மூடநம்பிக்கை—அழிவுவேலையை யும் செய்து வந்திருக்கின்றன.

ஒவ்வொருவரும் விஷயத்தை எங்ஙனம் நம்பவேண்டுமோ, அதன்படியே ஒழுங்காய் நம்புகிறார்கள் என்றால் அதில் எனக்குத்திருப்திதான். மதங்கள் எல்லாம் இயற்கையாகவே உண்டாக்கப்பட்டன என்ற விஷயத்திற்காக நான் யாரையும் புகழவுமில்லை—இகழவுமில்லை. நல்ல மனிதர்கள் கெட்ட கோட்பாடுகளைக் கொண்டிருந்திருக்கிறார்கள். கெட்ட மனிதர்கள் நல்ல கோட்பாடுகளைக் கொண்டிருந்திருக்கிறார்கள். மனிதவர்க்கத்தில் மிகச் சிறந்தவர்களில் அநேகர் கெட்டவர்களின் பொருட்டுச் சண்டை செய்து இறந்துபோயிருக்கிறார்கள். மனிதனுடைய மூளை முரண்பாடுகள் தாங்கியிருப்பதற்குரிய விடம். மோகம், அறிவை மேற்கொண்டுவிடுதலு முண்டு. "மனிதனுடைய நிலைமை, ஒரு சிறிய ராஜ்யத்தில் நடப்பதைப்போல, முரட்டுத்தனமாக புரட்சி இயக்கங்களைப் போன்றவைகளையும் பொறுத்துக் கொள்ளுகிறது."

மதவிஷயமான விவாதங்களில் நமது சொந்த விவகாரங்களின் நிலைமைகளைப்பற்றிப் பேசிக்கொள்வதில்லை. நாம் வசை மொழிகளையும், அவதூறான வார்த்தைகளையும் மாற்றிக் கொள்வதற்குப் பதிலாக இப்போது நியாய வாதங்களைச் சீர்தூக்கிப் பார்க்கிறோம். எதார்த்தமாகவே உண்மையை நாடுகிறவர்கள் நமது நண்பர்களில் மகா சிலாக்கியமானவர்களாயிருக்க வேண்டும்.

ஒருவன் ஆசைப்பட்டதனுல் மட்டும் உண்மை யிருக்குமிடத்தை ஒருபோதும் அடைய முடியாது என்பதை ஒவ்வொருவரும் அறிவர். உண்மையைக் காண்பதற்கு அடுத்தபடியாக எதார்த்தமான ஆராய்ச் சியால், மிகப்பெரிய கௌரவத்தை அடையவேண்டும். இதையாவரும் அறிந்தேயிருக்கிருர்கள்.

ஒரே காற்றினுல் அநேக கப்பல்கள் அநேக வழி களில் செலுத்தப்படுவதை நாம் காண்கிறேம். அது போலவே ஒரே புஸ்தகத்தைப்படிக்கும் அநேக மனிதர் கள் அநேக கோட்பாடுகளைப்பற்றி எழுதுகிருர்கள்: மோக்ஷ லோகத்திற்கு அவர்கள் அநேகவழிகளை ஏற்படுத்தி வைக்கிருர்கள். எனது சக்திக்கு எட்டின மட்டில் நான் அநேக மதங்களை ஆராய்ச்சி செய்திருக் கிறேன். அநேக வகுப்பினர்களுடைய கொள்கைகளை யும் நான் அருவித்துருவி பார்த்திருக்கிறேன். எல்லா மதங்களும், பெரும்பாலும் ஒன்றுக்கொன்று ஒத்தே காணப்படுகின்றன. அவை உண்மையாகவே இருக்கின் றனவென்பதைக் காட்டும் ருஜுக்களும் இருந்துவருகின் றன. அந்த ருஜுக்கள் ஒரேவிதமானதன்மையைப்பற்றிய தாகஇருக்கிறது. அத்தன்மை என்னவென்ருல் நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஆநியந்தமற்ற பரிசு வாக்களிக்கப் படுகிறதென்பதுதாம். எல்லா தெய்விக புஸ்தகங்களி லும் உண்மைகள் கொஞ்சம் இருக்கின்றன; அங்கு ஏதோ கொஞ்சம் வெளிச்சத்தின் கிரணங்கள் தோன்று கின்றன. அங்கு அன்பையும், நம்பிக்கையையும் காட் டும் சில வார்த்தைகளும் காணப்படுகின்றன. காட்டு மனிதர்களின் வாழ்க்கை புன்சிரிப்புகளால் சில சமயங்

களில் சாந்தப்படுத்தப்படுகிறது. மானிட வெற்றிகளும், இருதயநடைப்புகளும் பாட்டுகளாய் மாறுகின்றன. ஆனாலும் இப்புத்தகங்களில் பயத்தையும் வெறுப்பையும் காட்டும் வார்த்தைகளும் காணப்படுகின்றன. அதன்பக்கங்களிலிருந்து கொடும் விஷப்பாம்புகள் நகர்ந்து செல்லுகின்றன. அவை மக்களின் எல்லாவழிகளிலும் சுற்றிக்கொண்டும் சீறிக்கொண்டும், திரிகின்றன.

நான் சம்பந்தப்பட்ட மட்டில் தேவ அருள் நுழையாத புஸ்தகங்களையே பெரிதும் விரும்புகிறேன். என் மூளையின் இயல்பு அங்ஙனமிருக்கிறது. பூர்வ உலகத்தில் தோன்றின எல்லா தீர்க்கதரிசிகள் எழுதிய புஸ்தகங்களையும்விட, ஷேக்ஸ்பியர் எழுதிய நூல் எனக்கு அதிகமான சந்தோஷத்தைக் கொடுக்கிறது. மனதின் பசியைத் திருப்தி செய்து வைக்கக்கூடிய எண்ணங்களும் இருக்கின்றன. ஆதியாகமம் எழுதிய ஆசிரியரைவிட ஹம்போல்ட் என்னும் பெரியார் பூததத்துவ சாஸ்திரத்தைப்பற்றி அதிகமாகத் தெரிந்திருந்தார் என்று நான் நன்கு தெரிந்திருக்கிறேன். உலகப்பிரளயக் கதையைப்பற்றிச்சொன்ன மோசேயைவிட டார்வின் பெரியார் பெரிய இயற்கை சாஸ்திரி என்பது என் அபிப்பிராயம். யோசுவாவைவிட லாப்லேஸ் என்ற அறிஞர் சூரிய சந்திர இயல்புகளைப்பற்றி நன்கு தெரிந்தவர் என்பது என் தீர்மானம். தெய்வீக சாஸ்திர புஸ்தகங்களை எழுதின எல்லாரையும்விட ஹெக்கெல், ஹக்ஸ்லி, டின்டால் முதலிய பேரறிஞர்கள் பூமியைப்பற்றியும், நட்சத்திரங்களைப்பற்றியும், மானிட சாஸ்திரத்தைப்பற்றியும், வாழ்க்கைத் தத்துவத்தைப்பற்றியும், மானிட வர்க்கத்திற்கு இன்னும் அதிக உபயோகமான விஷயங்களைப்பற்றியும் பத்

தாயிரமடங்கு அதிகமாகத் தெரிந்தவர்கள் என்பது என்னுடைய துணிபு.

பகுத்தறிவுக் கொள்கையில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதுதான் இவ்வுலகத்திற்குத் தக்க புனிதமான இயக்கமாகும். மனோ வளர்ச்சிக்கும், அறிவுப்பொருளின் சேமிப்புக்கும், மூடநம்பிக்கையின்பாற்பட்ட பயத்தினின்று மனிதன் தன்னை விடுவித்துக்கொள்ளுவதற்கும், இயற்கை சக்தியின் அநுகூலங்களை மனிதன் அடைந்து கொள்ளுவதற்கும், அவைகளின் மூலமாக உலகை அலங்கரித்து போசிப்பிக்கவும் பகுத்தறிவுக்கொள்கையே பொருத்தமுடையதாகும்.

நாம் நம்மைப்பற்றின மட்டில் எதார்த்தமாயிருத்தல் வேண்டும். நாம் எண்ணற்ற அற்புதங்களினூடே இருந்து வருகிறோம். திசைகளற்ற ஆகாயத்தின் கீழே நாம் நிற்கிறோம். அவ்வாகாயத்தில் எண்ணற்ற நட்சத்திரங்கள் கூட்டங் கூட்டமாய் நெருங்கிக்காணப்படுகின்றன. ஒவ்வொரு நுண்ணிய மணற் பகுதியும், ஒவ்வொரு இலையும், ஒவ்வொரு புல்லிதழும், ஒவ்வொரு மனதையும் நோக்கிக் கேள்விகள் கேட்டவண்ணமாகவே இருக்கின்றன. ஆனல் அக்கேள்விகளுக்குப் பதில் கிடைப்பதில்லை. மிக அற்பமான பிரச்னையையும் நம்மால் தீர்த்து வைக்க முடியாது என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம். நம் அறிவுக்கு மேற்போன ஒரு விஷயத்தைப்பற்றி நாம் சிந்தனை செய்வதாக உணருகிறோம். நமது அறிவிற்கு அப்பாற்பட்டதென்று கூறப்படும் ஒரு விஷயத்தைப்பற்றி நாம் சிந்திக்கிறோமெனவும்

அறிகிறோம். உண்மைப் பொருள்களினின்றும்—முழு முதற் பொருளினின்றும் நாம் எப்போதும் தப்பித்துக் கொண்டு போய் விடுகிறோம். நாம் நம்முடைய மனதின் எல்லை அளவை ஒத்துக்கொள்ளவேண்டும். ''நமக்குத் தெரியாது'' என்று சொல்லிவிடுவதற்குப் போதுமான தைரியமும், எதார்த்த புத்தியும் நமக்கு இருக்கவேண்டும்.

கிறிஸ்து மதம், கிறிஸ்துவால் செய்து காட்டப்பட்ட அற்புதச் செயல்களைச் சார்ந்திருக்கிறது. விஞ்ஞான உலகத்தில் அற்புதம் என்று ஒன்றும் கிடையாது. உண்மையான தத்துவ சாஸ்திரி, எவரிடத்திலும் ஆச்சரியத்தை உண்டாக்க ஒரு பொழுதும் விரும்பான். ஆனால், ஆச்சரியம் போன்றிருக்கக்கூடியவைகளை அவன் சாமான்யமாக்கிக் காட்டவே முற்படுவான். அவனுக்குப் பிறரிடம் ஆச்சரியம் தோன்றாதிருக்கும்படி செய்து, அவனிடம் உண்மை அறிவு கொளுத்துவதற்கே விரும்பியிருப்பான். இயற்கையில் அற்புதம் என்பதொன்றுமில்லை என்றே அவன் உறுதியாய் நம்பியிருக்கிறான். அவ்வியற்கையின் சம்மந்தங்களைக் காட்டக்கூடிய கணிதக்குறியீடுகளும், பொருள் அடக்கங்களும், விஸ்தீரணங்களும், எண்ணிக்கைகளும், விகிதாச்சாரங்களும் எக்காலத்தும் மாறத்தக்கவையல்ல வென்பதை அவன் அறிந்திருக்கிறான். ரசாயன சாஸ்திரத்தில் அற்புதங்கள் ஒன்றுமில்லையென்பது அவனுக்குத் தெரியும். அணுக்களின் ஐக்கிய சக்தியும், விலக்க சக்தியும், அவைகளின் விருப்புத் தன்மையும், வெறுப்புத்தன்மையும் மாறாத நிலைமை பெற்றவை என்ற விஷயம் அவனுக்குத் தெரிந்ததுதான்.

ஒத்த நிலைமைகளில், பொருள்களினிடத்து ஒத்த முடிவே தோன்றும் என்பதில் அவன் உறுதிகொண்டிருக்கிறன். உற்பத்தி எக்காலத்திலும் இருந்து கொண்டே வந்திருக்கிறது. இனிவருங்காலத்திலும் அது அங்ஙனம் இருந்துகொண்டுதானிருக்கும். அணுக்களின் சேர்க்கை மாறுபாடில்லாத ஓர் அளவுக்கு உட்பட்டே இருக்கும். அவை வெளியாங்கமான அளவு முறைகளைச் சார்ந்தே ஐக்கியமாகும். ஒரே வகையின் அணுத்திரள்கள் கூடிக்கலந்து உருவாகும்போது, அவை மற்றவையின் அதே அளவு அணுக்கூட்டங்களையே ஆகர்ஷித்துக் கொள்ளுகின்றன. அச்சேர்க்கைக்கு அவசியமில்லாமல் மிஞ்சிவிடக்கூடியவை, எக்காலத்தும் கழிக்கப்பட்டே போகின்றன. இவ்விதிக்கு விலக்கென்பதே கிடையாது. வஸ்துக்கள் எப்போதும் தம் இயற்கையின் பண்புபற்றியே தவருது இலங்குகின்றன. அவை வரம்புக்கடங்காமல் இயங்கா. அவைகளிடம் துவேஷம் என்பது கிடையாது. அவைகளின் செயல்களை அவைகளுடைய எந்த மாறுபட்ட எண்ணங்களும், துவேஷபுத்தியும், மாற்றவும் ஆட்சிபுரியவும் முடியா. அவை நேற்று எப்படி இருந்தனவோ அப்படியே. இன்றும் இருக்கின்றன. இனியும் அவை அப்படியேதான் இருந்து வரும். எக்காலத்தும் அவை அப்படியே இருந்துவரும்.

இந்த ஸ்திரமான நிலைமையில், இந்த நிரந்தரமான ஸ்திதியில், இந்த ஆதியந்தமற்ற முழுமுதற் பொருளினிடத்தில் அறிஞனன மனிதனுக்கு பூரண நம்பிக்கையுண்டு. நெருப்புக்கு எரியுந்தன்மையுள்ள வஸ்துக்களைத் தகிக்கும் சக்தி ஒரு காலத்தில் இல்லாதிருந்

தது என்றும், பள்ளமுள்ள விடங்களுக்கு ஓடும் சக்தி நீரிலிடம் ஒருகாலத்தில் இல்லாதிருந்தது என்றும், பொருளுக்கு கனம் என்பதே ஒருகாலத்தில் இல்லாதிருந்தது என்றும் அவனுக்குச் சொல்லப்புகுவதில் ஒரு சிறிது பலனுமில்லை.

தன்னம்பிக்கை, அறிவின் வேலைக்காரனாக இருத்தல் வேண்டும். அறியாமையை அணிகலனாயுடைய மக்கள் உண்மையான விஷயத்தை சுலபமாய் நம்புவதில்லை. ஏனென்றால் உண்மையான விஷயங்கள் அவர்களுடைய புலன்களின் காட்சிகளுக்கு விரோதமாகத் தோன்றுகின்றன என்பதாலே. சூரியன் உதயமாகி அஸ்தமனமாவது அவர்களுக்கு ஸ்பஷ்டமாக இருக்கிறது. பூமியின் சுழற்சி இயக்கத்தை அவர்கள் சுலபமாய் நம்பமுடிவதில்லை. அவர்களுக்குத் தங்களுடைய நம்பிக்கையில் இருக்கும் ஆபாசங்களையும், பூமியின் சுழற்சி இயக்கத்திலும், மக்களால் கண்டறியப்பட்டிருக்கும் பிற விஷயங்களிலும் அமைந்து கிடக்கும் சம்பூரணமான ஐக்கியப் பாகுபாட்டையும், அறிந்து கொள்ளத்தக்க போதுமான அறிவு கிடையாது. அவர்கள் தங்கள் கண்களை நம்புகிறார்களே தவிர தங்கள் பகுத்தறிவை நம்புவதில்லை. அறியாமை யென்பது தோற்றத்தின் தயவிலேயே எப்போதும் இருந்து வந்திருக்கிறது. இனி எப்போதும் அது அப்படியேதான் இருந்துவரும். சுலப நம்பிக்கை யென்பது ஏதோ சட்ட முறைக்கு உட்பட்டதுபோல, எதை நம்பினாலும், உண்மையை மட்டும் அது நம்புவதில்லை. அரைகுறையான நாகரிகம்படைத்த மக்கள் ஜோதிடத்தில் நம்பிக்கை கொண்

டிருக்கிறார்கள். ஆனால் மிகப்பரந்த வான வெளியின் விஸ்தீரணத்தைப் பற்றியும், வெளிச்சங்களின் வேகத்தைப் பற்றியும் சூரியர்களின் எண்ணிக்கைகளைப் பற்றியும், அவைகளின் தோற்றங்களைப்பற்றியும், கூட்டம் கூட்டமாகத் தோன்றும் நட்சத்திரக் கூட்டங்களைப் பற்றியும், யார் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி நம்பச்செய்வார்கள்? ஹெர்மான் என்னும் மந்திரவாதியும், ஹம்போல்ட் என்னும் தத்துவ சாஸ்திரியும், அறிவற்ற காட்டுமிராண்டிகள் முன்பு தோன்றினால், இவ்விருவர்களில் யாரைக்கடவுள் என்று மதிப்பார்கள்?

மக்கள் இயந்திர சாஸ்திர நுட்பங்களைப்பற்றி ஒன்றும் அறியாதிருந்த காலத்திலும், அவர்களுக்கு சக்தியின் சம்மந்தா சம்மந்தங்கள் ஒன்றும் தெரியாதிருந்த காலத்திலும், பொருளின் அழிவிலாத்தன்மை அறியப்படாதிருந்த காலத்திலும், அவர்கள் பொருள்களின் இடையறு நிகழ்ச்சியில் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தார்கள்: ஆதையால் ரசாயனம் ஒருவிநோத தந்திர வித்தையாகக் கையாளப்பட்டு வந்த காலத்திலும், இறந்தவர்களின் ஆவிகளின் உதவியால் வருங்காலப் பலன்களை அறிய, தெய்வசக்தியின் உதவியை மக்கள் நாடியிருந்ததாகச் சொல்லப்பட்ட காலத்திலும், மக்கள் இரச வாதத்தைப்பற்றிப் பேசிவந்தார்கள். அத்தகைய வாதமறிந்தவர்கள் சர்வலோக தன வந்தராகவும், நினைத்த உலோகத்தைத் தங்கமாக்கிவிடும் சக்திபெற்றவராகவும் கருதப்பட்டு வந்தார்கள். ஓய்விலா ஓட்டம் ஒரு இயந்திர அற்புதமாகும். உலோகமாற்றம் ரசாயனத்தில் ஒரு அற்புதமாகும். இரண்டை இரண்டால் பெருக்

கும்போது, ஐந்து பெறுவதானல் அது கணித அற்புத மாகும். ஒரு வட்டத்தின் குறுக்களவு அதன் சுற்றள வின் காலில் ஒருபங்கு இருக்கக்கூடுமென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அப்படிப்பட்ட அளவில் அமை க்கப்பட்ட ஒரு வட்டத்தை யாராவது காணக்கூடுமானல் அது க்ஷேத்திர கணிதத்தின் ஒரு அற்புதமாகும்.

வேறுவிதமாகக் கூறுமிடத்தும் எந்த விஞ்ஞான நூலிலும் அற்புதம் என்பதே கிடையாது. நாம் ஒரு விஷயத்தையோ, ஒரு கேள்வியின் பதிலையோ தெரிந்து கொண்டுவிட்டால் அந்தவிநாடியே நமது அற்புதம் கட் டாயமாகவே நம்மைவிட்டு மறைந்துவிடுகிறது. ரசாயன உலகத்தில் ஏதேனும் உண்மையாகவே நிகழ்வதாயின், அதுபோன்ற நிலைமைகளிலெல்லாம் அதே நிகழ்ச்சி மறுபடியும் தோன்றியேதீரும். இம்முடிவைப்பற்றி பிறர் வாயிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. இதை எல்லாரும் தாங்களாகவே பரிக்ஷித்து அறிய முடியும். இதில் கண்டபடி எவ்வித வரம்பற்ற தன்மையு மிராது. தற்செயலாய் நோக்ககூடியது என்று ஒன்று மிராது.

கிறிஸ்துமத வேதமாகிய புதிய ஏற்பாட்டில், உலகத் தில் அற்புதங்கள் நிகழக்கூடிய காலமெல்லாம் மறைந்து விட்டதாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகவே தற்காலத் தில் அற்புதங்களை அற்புதங்களாலேயே நிர்ணயிக்க முடி யாது. அவைகளை சாட்சிகளின் வாக்கு மூலங்களால் ருஜுப்படுத்த வேண்டும். இத்தகைய சாட்சிகள் பல நூற்றுண்டுகளுக்கு முன்னதாக இருந்து வந்ததாகச் சில ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இங்ஙனம் கூறும் சில

ஆசிரியர்களை இன்னாரென்றே தெரிந்துகொள்ள முடிய வில்லை. இவ்வாக்குமூலங்கள் சாட்சிகளாலேயே நமக்குக் கொடுக்கப் பட்டவையுமல்ல. அல்லது அந்த சாட்சிகளோடு சம்பாஷித்ததாகச் சொல்லும் எந்த மனிதர்களாலும் கொடுக்கப் பட்டவையுமல்ல. ஆனால் இன்னாரென்றே அறியமுடியாத மனிதர்களாலேயே அவை கொடுக்கப்பட்டதாகும். அத்தகைய சாட்சிகளும் தாங்கள் கூறும் விஷயங்கள் தங்களுக்கு எங்கிருந்து கிடைத்தனவென்பதைப் பற்றியும் எங்கும் சொல்லவேயில்லை.

அற்புதங்களை அற்புதங்களாலே யன்றி வேறுவழிகளில் ஸ்தாபிக்க முடியுமாவென்பது இங்கு எழும் கேள்வி. ஆசிரியர்கள் எவராலும் தவறிழைக்கப்படலாம் என்பதை நாம் அறிவோம். இவ்விருத்தாந்தங்களை அவர்களே சிருஷ்டித்திருக்கவும் கூடும். சாட்சிகள் தாங்கள் பொய் என்று அறிந்ததைக் கூறியுமிருக்கலாம். அல்லது அவர்கள் யதார்த்தமாகவே ஏமாற்றப்பட்டு மிருக்கலாம். அல்லது கதைகள் முதல் முதலாகக் கூறப்பட்டதுபோலவே உண்மையாகவும் இருக்கலாம். அத்துடன் கற்பனையும் அதிகமாகக் கலந்திருக்கலாம். மிகச் சாமான்யமான உண்மை, பல நூற்றாண்டுகளுக்குப்பிறகு கற்பனைகளுடன் கலந்து வளர்ந்து ஒரு அற்புதமாக மாறிப் போயிருந்தாலுமிருக்கலாம்.

எளிதாய் நடக்கக்கூடியவை யெல்லாம் அற்புதங்களுக்கு நேர் விரோதமென்றே நாம் கொள்ளவேண்டும். ஏனென்றால் எளிதில்செய்யக் கூடியதொன்று ஒரு அற்புதமாக எண்ணக்கூடியதாகாது என்ற காரணத்தாலே-

எளிதில் நடைபெறக் கூடியதாவது, நடைபெறுவதற்குச் சாத்தியமானதாவது, மனிதன் சம்பந்தப் பட்டமட்டில் அற்புதச் செயலாகமாட்டாது. ஆகையால் நூலாசிரியர்களும் சாட்சிகளும் தவறிப்போயிருக்க வேண்டும், இல்லையானல் அவர்கள் அயோக்கியர்களாக இருந்திருக்க வேண்டும். இப்படித்தான் விஷயம் இருந்திருக்க வேண்டும்.

நாம் அற்புதச்செயல் எதையும் எப்போதும் பார்த்ததில்லை என்றே ஒப்புக்கொள்ளுவோம். நம்முடைய அநுபவத்தின்படி அற்புதம் என்பதே இல்லையென்றே ஒப்புக்கொள்ளுவோம். நாமும் உலகத்தோடு கலந்தவர்கள்தான் என்றல், நம்மில் எண்ணிறந்த மக்கள் தவறிப் போயிருக்கிறர்கள் என்றே நாம் சொல்லுவோம். மற்றும் பலர் உண்மையை உள்ளபடி சொல்லத்தவறியிருக்கிறர்கள். இவைகளைப்பற்றி நாம் நன்கறிவோம். இந்த அபிப்பிராயத்தையே நான் எங்கும் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன் சாதாரணமாய் நடக்கக்கூடியவைகளையே நமது அநுபவத்தில் காண்கிறோம். ஆகவே அவை அற்புதங்களுக்கு நேர் விரோதமானவை. சுதந்தரம் பெற்ற மனது, எதிர்ப்பு இல்லாத வழியில் இயங்க வேண்டிய அவசியத்தைப் பெற்றிருக்கிறது.

சாட்சியத்தின் பலன் சாட்சியின் யதார்த்தத்தையும் அறிவையும் பொறுத்திருக்கும். அப்பலன் அதைச் சீர்தூக்கிப்பார்ப்பவனுடைய அறிவையும் பொறுத்திருக்கும். தெய்வீகத்தன்மையே எதிர்பார்க்கப்படும் ஒரு வகுப்பினிடத்திலும், அற்புதம் என்பது அநேகமாய் நித்திய சம்பவமாயிருக்கக் கூடிய ஒரு வகுப்பினிடத்

திலும் வசித்துவரும் ஒரு மனிதன், அதிசய விஷயங்களெல்லாம் தெய்விகச்செயல் என்றே நம்புவான். இதை அவன் சட்ட சம்மதமானதுபோலவே கருதிவருவான். அவன் எந்த விஷயத்திலும் தெய்வப்பிரவேசத்தை எதிர் பார்ப்பான். அதனால் அவனுடைய மனம் எதிர்ப்பில்லா மார்க்கத்தையே தேடிச்செல்லும். எல்லா சம்பவங்களுக்கும் அவன் மிகச்சுலபமான காரணத்தைக் காட்டிக் கொள்வான். அத்தகைய மனிதர்கள் நல்லஎண்ணமுடையவர்களாயிருந்தும், யதார்த்தமாகப் பொய்சொல்லுகிறவர்களாகிறார்கள்: அவர்கள் தோற்றங்களினால் ஏமாந்து போகிறார்கள். அவர்கள் பொய்யான நம்பிக்கைக்கும் தவறான எண்ணங்களுக்கும் ஆளாகிவிடுகிறார்கள்.

எழுத்தும் படிப்பும் விசேஷமாய் இல்லாதிருந்த ஒரு காலத்திலும், தேசசரித்திரம் என்பது கொஞ்சம் கர்ண பரம்பரையாக அறியா மக்களிடமிருந்து குழந்தைகளுக்கு மாறிக்கொண்டு வந்த காலத்திலும், ஆச்சரிய நடப்புகளும், அற்புதச்செயல்களும் தவிர வேறு ஒன்றும் மக்களுடைய மறதியிலிருந்து காப்பாற்றப்படவில்லை. கதை எவ்வளவுக்கெவ்வளவு ஆச்சரியத்தை விளைக்கக் கூடியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மக்களின் மனமும் கவியலாயிற்று. கதை சொல்லுகிறவர்களும் அதைக்கேட்பவர்களும் ஒரேமாதிரி அறியாமை மிகுந்தவர்களாகவும் ஒரேமாதிரியான யதார்த்தமுடையவர்களாகவுமிருந்தார்கள். அக்காலங்களில் ஜனங்களுக்கு இயற்கையின் ஒழுங்கு நியமங்களைப்பற்றி ஒன்றுந்தெரியாது. அவர்கள் எதையும் சந்தேகிக்கவேயில்லை. காரணகாரிய ஒழுங்குவரிசைகள் மாறுந்தன்மையுடையவை யல்லவென்

றும், அவை அழியுந்தன்மையுடையவை யல்லவென றும் அக்காலத்தவர்களுக்குத் தெரியாதிருந்தது. உலகம் எவ்விதமான வரம்புக்குமடங்காமல் ஆட்சிசெய்யப் பட்டு வந்திருக்கிறது. எல்லாம் ஒரே ஒரு கடவுளுடைய தயவிலோ பல தேவதைகளின் தயவிலோ இருந்து வந்திருக்கின்றன. அந்த கடவுள்களும் மனிதர்களிடம் வியாபித்திருந்த அதே குணுகுணங்களாலேயே ஆளப்பட்டு வந்திருக்கின்றன. சிறிதளவு உண்மையை வைத்துக் கொண்டு அதன்பேரில் பெரிய நம்பிக்கைகளை வைத்துக் கொண்டார்கள். உத்தேசமாக அறியக்கூடிய முடிவுகளெல்லாம் நேர்மையுடையவையாயும், இயல்புக்கு விரோதமானவையாயுமிருந்தன.

உலகத்தில் தோன்றின மதங்களிலெல்லாம் மக்களுக்கு நம்பிக்கை இருந்தே வந்திருக்கிறது என்பது நிச்சயமாயிருந்திருக்கலாம். எல்லா அற்புதங்களும் எண்ணற்ற மூளைகளுக்கு விசுவாசத்தையே கொடுத்து வந்திருக்கின்றன. இல்லாவிட்டால் அவைகள் நீடித்திருக்க முடியாமல் போயிருக்கக்கூடும். அவையாவும் தந்திரத்தினல் உற்பத்தியானவையல்ல. அவைகளைச் சொன்னவர்கள் அவைகளைக் கேட்டவர்களைப்போலவே உண்மையானவர்கள்தான். அப்படியிருப்பதால் மக்களின் விசுவாசத்திற்கு மிகவும் ஆபாசமாய் இருக்கக்கூடிய விஷயம் ஒன்றுமில்லை.

எல்லாமதங்களும், நான் அறிந்தமட்டில், அற்புத முறையில் ஸ்தாபிக்கப்பட்டதாயும், அற்புதமுறையில் காப்பாற்றப்பட்டதாயும் அற்புதமுறையில் பிரசாரம் செய்யப்பட்டதாயும் சொல்லப்படுகின்றன. எல்லாமதங்

களைச் சேர்ந்த குருமார்களும் கடவுளிடமிருந்து வாக்கு களை கேட்டதாகவே சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று சில அதிகாரங்களைக் கேட்டிருக்கிறார்கள். கடவுளுடைய வாக்குகளை மெய்ப்பிக்கவும் தங்களுடைய விசேஷ அதிகாரத்தை சாஸ்வதமாக்கவும், அற்புதத் திருவிளையாடல்கள், அவர்களால்கையாளப்படலாயின.

மக்கள் தெய்விகத்தில் நம்பிக்கையுடையவர்களானால், அவர்கள் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் காரணமாக தெய்விகவழிகளையும் தெய்விக சக்திகளையும் எடுத்துக் காட்டுவார்கள் முற்காலங்களில் இவ்விதமாகவே விஷயங்கள் எல்லாம் விளக்கப்பட்டு வந்தனவென அறிகிறோம். மனிதன் பூரணமாய்த் தெரிந்திருந்ததாக எண்ணின சில சாமான்ய விஷயங்களுக்கு மட்டும் தெய்விகம் கற்பிக்கப் படவில்லை. சில காலத்திற்குப் பிறகு மக்கள் ஒத்தநிலைமைகளில் ஒத்தசம்பவங்களே நேரிடுகின்றனவெனக் கண்டார்கள். அந்தகைய விஷயங்களுக்குத் தெய்விக சங்கல்பம் ஏற்படுகிறது என்ற உத்தேசம் கைவிடப்பட்டுப் போயிற்று. ஆனால் மக்கள் அறிவுக்கு அப்பாற்போன விஷயங்களிலெல்லாம் தெய்விகப் பிரவேசம் இன்னும் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. வேறு விதமாகச் சொல்லவேண்டுமானால் மக்களின் அறிவெல்லை விஸ்தாரமாகும்போது தெய்விகப் பிரவேசம் என்ற விஷயம் இருப்பதில்லை. ஆனால் அது அறிவெல்லைக்கு அப்பால்தான் வேலைசெய்வதாக இருக்கிறது.

இக்காலத்தில் பிரபஞ்ச விஷயங்களுக்கு விசேஷ தெய்வச் செயல் இருப்பதாகச் சிலர் நம்புகிறார்கள். ஒரு

தெய்விக சக்தி இடைவிடாமல் மக்கள் காரியங்களில் பிரவேசித்துக் கொண்டே இருப்பதாக அநேகர் நம்புகிறார்கள். அத்தகைய சக்தி தனிப்பட்ட நபர்களையும், ஜனசமூகத்தையும் தண்டிக்கவும், அல்லது அவர்களுக்குப் பரிசளிக்கவும், அவர்களை அழிக்கவும் அல்லது பாதுகாக்கவுமான காரியங்களையெல்லாம் செய்வதாக மக்கள் நம்புகிறார்கள்.

அநேகர் சாமான்ய விஷயங்களில் தெய்விக எண்ணத்தைப் பற்றி கவலைகொள்வதில்லை. ஆனாலும் கடவுள் பெரிய விஷயங்களிலும், நெருக்கடியான சமயங்களிலும் பிரவேசிப்பதாக அவர்கள் எண்ணிக் கொள்கிறார்கள். ஜனசமூக விஷயங்களில் தெய்வ சங்கற்பம் விசேஷமாயிருக்கும் என்று நம்புகிறார்கள். பெரிய ஆபத்துகளில் கடவுள் பரிஷ்காரமாய்த் தோன்றுகிறார் என்று எண்ணிக் கொள்ளுகிறார்கள். இது ஒரு சமாதானத்தைக் குறிக்கும் நிலைமையேயாகும். ஆதியந்தமற்ற ஒரு தெய்வம் உலகத்தைப் படைத்ததாகவும், அது "சட்டங்கள்" என்றவைகளுக்கு அவ்வுலகத்தை உட்படுத்தி வைத்ததாகவும், பிறகு அச்சட்டங்களின்படியும் சக்திகளின்படியும் அது உலகத்தை நடக்கவிட்டது என்றும் இந்த ஜனங்கள் நம்புகிறார்கள். தெய்வத்தின் ஆக்ஞைப்படி அத்திட்டம் நன்குவேலை செய்கிறதென்றும், அந்த தெய்விககர்த்தா விபத்து ஏற்படும் காலங்களிலேயே பிரவேசிக்கிறார் என்றும், அல்லது அக்கர்த்தாவின் திட்டம் தோல்வியுற்று அவருடைய மூல நோக்கங்கள் கைகூடாதுபோகும் சமயங்களில் அவர்நேரே அவதாரம் செய்கிறார் என்றும் நம்பப்படுகிறது.

எல்லாம் இயற்கைதான் என்ற நியாயத்தைப்பற்றி வேறு சிலர் இருக்கிறார்கள். வெளியிலிருந்து எந்த சக்தியின் பிரவேசமும் ஒருக்காலமும் இருந்ததில்லை யென்றும், இனியும் எக்காலத்திலும் அங்ஙனம் இருக்காது என்றும், அங்ஙனம் இருக்கவும் முடியாது என்றும் அவர்கள் உறுதிகொண்டிருக்கிறார்கள். இயற்கை யாவற்றையும் தழுவியே நிற்கும் என்ற சித்தாந்தமும், அப்பாலிருந்தோ அல்லது அப்பாலுக்கப்பாலிருந்தோ ஒன்றையும் காணமுடியாது என்ற சித்தாந்தமும் அவர்களுக்குண்டு.

முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆஸ்திகர்கள். இவர்கள் சாமான்ய மானவர்களாயும் சரியான ஆஸ்திகர்களாயுமிருப்பவர்கள். இரண்டாவது வகுப்பினர் தங்கள் அறிவுக்கப்பாற்பட்ட விஷயங்களுக்கு மட்டும் ஆஸ்திகராயிருப்பவர்கள். அவர்கள் தங்கள் அறிவுக்குட்பட்ட விஷயங்களில் இயற்கை சாஸ்திரிகளாவர். மூன்றாவது பிரிவினர் இயற்கை சாஸ்திரிகளேயாவர். இவர்கள் மூடநம்பிக்கையின் மாசு சிறிதும் இல்லாதவர்கள்.

முதல் வகுப்பினர் கூறும் சாட்சியங்களுக்கு என்ன மதிப்பிருக்க முடியும்? தெய்விகத்தில் கண்மூடித்தனமாக சம்பூரண நம்பிக்கை வைத்திருந்த ஜன சமூகங்களின் சரித்திரங்களைப் படித்துப்பார்த்தால் அக்கேள்விக்குப் பதில் கிடைக்கும். அவர்களுடைய சாட்சியத்தால்-மனதால் நினைக்க முடியாத ஆபாசங்களெல்லாம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இயற்கையில் ஒவ்வொரு சட்டமும் ஒவ்வொரு உண்மையும் பங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் இல்லாமல் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. மனிதர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்

கள் வரையில் ஜீவித்திருக்கிறார்கள். அநேகர் உணவில்லாமலும் நித்திரையில்லாமலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்களைப் பேய்கள் பிடித்திருக்கின்றன. இப்பேய்க் கூட்டங்களைப் பெரும் பூதங்களும், பிணம் விழுங்கும் போாவிகளும் ஆட்சிசெய்து வந்தன. தங்களால் செய்யமுடியாத குற்றங்களைத் தாங்களே செய்ததாக ஆயிரக்கணக்கானவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நியாயஸ்தலங்களில் மிகவும் பயபக்தியான சடங்குகளோடு. சத்தியங்களினாலும், உறுதிமொழிகளினாலும், ஆடவர், பெண்டிர், குழந்தைகளால் தவறுகள் ஒப்புக்கொள்ளப்படுவதாலும், மனிதர்களால் சாதிக்கமுடியாத காரியங்கள் சாதிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

இத்தகைய மாயா விஷயங்கள் சந்நியாசிகளிடத்திலும் குடியானவர்களிடத்திலுமே இருந்து வரவில்லை. ஆனால் அவைகள் பிரபுக்களையும் அரசர்களையும் ஆக்கிரமித்திருந்தன. அக்காலங்களில் அறிஞர்கள் எனப்பட்ட மனிதர்களையும் படித்தவர்கள் என்றவர்களையும். அவ்விஷயங்கள்பற்றி யிருந்தன. இவ்வதிசயங்களை யாரும் மறுக்கவில்லை. ஏனென்றால் இவைகளை மறுப்பது குற்றமாகப் பாவிக்கப்பட்டிருந்தது. அக்குற்றத்திற்குப் பொதுவாய் மரணதண்டனையே விதிக்கப்பட்டு வந்தது. ஜனசங்கங்களும், ஜனசமூகங்களும், அறிவிழந்து போயின. அறியாமையில் அநேகர் அழுந்திக் கிடந்தனர். அநேகர் கனவுகள் கண்டு வந்தனர். எல்லாரையும்விட பயத்தால் அவதியுற்றோர் பலர். இத்தகைய நிலைமைகளில் உள்ள மக்களிடமிருந்துகிடைக்கக்கூடியசாட்சி

யங்கள் அணுவளவும் மதிப்பையாவது கொடுத்ததில்லை, கொடுக்கவும் முடிந்ததில்லை. நாம் இப்போது உலக சரித்திரம் முழுவதுமே அநேகமாய் பொய் என்பதாகத் தெரிகிறோம்.

காரியங்களுக்குக் காரணங்கள் இருந்தே தீரவேண்டும் என்றும் நாம் காணும்போது, ஒவ்வொன்றும் இயற்கையாகவே உண்டாகிறது என்று தெரியும் அறிவுவளர்ச்சிக்குரிய முடிவுக்கே வருகிறோம். ஆகவே ஒரு தேசத்தின் ஆதாரம், மக்கள், அறிவு, வர்த்தகம் முதலியவைகள் சாதகமாயிருந்தாலன்றி அதைச் சேர்ந்த ஜனசமூகம் எப்போதும் பெருமையுடையதாகவும், வலிமையுடையதாகவும், செல்வமுடையதாகவும், இருக்கமுடியாது. விஷயங்கள் இங்ஙனம் சீர்தூக்கிப் பார்க்கப்படும்போது கிட்டத்தட்ட எல்லா சரித்திரங்களும் பொய்க்கதைகளாக இருக்கின்றனவென்றே காண்கிறோம்.

மதங்கள் விஷயத்திலும் இக்கருத்து உண்மையுடையதாகும். அறிஞனான ஒவ்வொரு அமெரிக்கனும், இந்தியா தேசத்து மதங்களும் எகிப்து, கிரீஸ், ரோம், மெக்ஸிகோ முதலிய தேசங்களின் மதங்களும் பொய் மதங்கள் என்று திருப்தி கொண்டிருக்கிறான். அம்மதங்களைச் சார்ந்துள்ள எல்லா அற்புதங்களும் பிசகானவை யென்பது அவனுடைய துணிபு. நம்முடைய மதம் மாத்திரம் குறையில்லாததென்றும், ஒவ்வொரு அறிவுள்ள இந்துவும் தன் மதம் ஒழிந்த எல்லா மதங்களையும் அவைகளின் அற்புதத் திருவிளையாடல்களையும் வெறுக்கிறான். மக்கள் பிற மதங்களிலுள்ள

குறைபாடுகளைத் தாங்கள் கவனித்தபடி நன்றாய் அறிதல் போல, தங்கள் சொந்த வேதசாஸ்திரங்களில் உள்ள குறைபாடுகளை எப்போது கண்டறிவர் என்பதே கேள்வி.

பொய் மதங்கள் என்று சொல்லப்படுவையெல்லாம், அற்புதங்களினாலும், சின்னங்களினாலும், விசித்திரங்களினாலும், தீர்க்கதரிசிகளாலும், பிராணத்தியாகிகளாலும் மெய்ப்பிக்கப் படுகின்றன. நம்முடைய மதமும் அப்படித்தான் மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய சாக்ஷிகள் அவர்களுடைய சாட்சிகளைப் போன்றவர்கள்தான். நம்முடைய வெற்றியும் அவர்களுடைய வெற்றியைவிடப் பெரிதாகாது. அவர்களுடைய அற்புதங்கள் பொய்யானால், நம்முடைய அற்புதங்கள் மட்டும் மெய்யாக இருக்கமுடியாது. இந்தியாவானாலும், பலஸ்தீனமானாலும் எங்கும் இயற்கை என்பது ஒன்றுதான்.

கிறிஸ்து மதத்தின் ஜீவஸ்தானங்கள் பலவற்றுள் கடவுள் அருள் ஒரு அற்புதமாகும். இதே அற்புதம் எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரமாக இருந்து வருகிறது. கடவுளுடைய அருள் என்ற விஷயத்தை எப்படி ஸ்தாபிப்பது? தேவ ஆவேசம் பெற்ற ஒரு மனிதன் தன் மீது தேவ ஆவேசம் வந்துவிட்டது என்ற விஷயத்தை எப்படி அறிந்துகொள்ளுவான்? அவன் எழுதுவதற்குத் தூண்டப்பட்டு ஏதோ எழுதினதாக வைத்துக் கொண்டாலும், தனக்கு அறவே புதிதாயிருந்த ஏதோ கருத்துக்களையும், உண்மைகளையும், அவன் வெளியிட்டதாக வைத்துக் கொண்டாலும், தனக்கு எற்கனவே ஒரு சிறிதும் தெரியாமலிருந்த விஷயங்களைப்பற்றி அவன் எடு

த்துரைத்தான், என்ருலும், ஆதியந்தமற்ற ஒருபரம்பொருள் தன்மீது ஆவாகனம் செய்தது என்று அவன் எப்படி தெரிந்துகொள்ள இயலும்? இவ்விஷயத்தைப் பற்றித் தானே அறிந்து கொண்டானுயினும், மற்றவர்களை அவன் எப்படி நம்பும்படி செய்வான்?

தெய்வ அருள் என்ருல் என்ன? தெய்வ அருள் கொண்டவன் தெய்வத்தின் எண்ணங்களையே கொண்டவன் ஆவனே? அவன் தெய்வத்திற்குக் கைக்கருவி போன்றவன்தானு? அல்லது அவனுடைய தோற்றம் அவன் பெற்றுச்சொல்லும் அருள்வாக்குகளை மிகைப்படுத்திக் கூற உதவுகிறதா? அவன் தன் அறியாமையைக் கடவுளுடைய சேதிகளுடன் கலந்து கொள்ளுகிருனு? அவன் தன் துவேஷங்களையும் வெறுப்புகளையும், கடவுளுடைய அன்போடும் நீதியோடும் கலந்து விடுகிருனு? தானுகவே இறந்துபோன எந்த மிருகத்தின் மாமிசத்தையும் தின்ன வேண்டாமென்று கடவுள் அவனுக்குச் சொல்லியிருந்தால், ஆதியந்தமற்ற அதே கடவுள், அந்த மாமிசத்தை வேலைக்கு வரும் அந்நியன் ஒருவனுக்கு விற்கும்படி அவனிடம் கூறுவாரா?

ஒரு மனிதன் தன்மீது கடவுளுடைய அருள் வந்துவிட்டதாகச் சொல்லுகிருன்: கடவுள் தன் கனவில் தோன்றியதாக அவன் கூறுகிருன். அக்கனவில் கடவுள் தன்னிடம் சில விஷயங்களைச் சொன்னதாகவும் சொல்லுகிருன். கடவுள் அவனிடம் வெளியிட்டதாகச் சொல்லப்படும் விஷயங்கள் நல்லதாகவும், மதிநிறைந்ததாகவு மிருக்கலாம். ஆனுல் விஷயம் நல்லதாகவும் மதிநிறைந்ததாகவு மிருந்ததற்காக அது கடவுளுடைய

அருள்வாக்கு என்பது ஸ்தாபிதமாகுமா? வெளியிடப் பட்ட விஷயம் ஆபாசமானதாயும் கொடுமையுள்ளதாயும் இருந்ததானால், அந்த மனிதன்மீது கடவுள் ஆவேசம் தோன்றவில்லையென்று தீர்மானமாய்க் காட்டுமா? வெளி யிடப்படும் விபரங்களை வைத்துத்தான் நாம் விஷயங் களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமா? இல்லாவிட்டால் நம்முடைய பகுத்தறிவு அதற்கு முடிவான அளவை யாயிருக்க வேண்டுமா?

கடவுளிடத்திலிருந்துதான் தனக்கு வாக்குகிடைத் தது என்பதை ஆவேசக்காரன் எப்படி அறிய முடியும்? ஒரு மனிதன்முன்பு, கடவுள் உண்மையாகவே தோன்றி னாலும், தன்முன் தோன்றியவன் யார் என்பதை அம் மனிதன் எப்படி அறிவான்? எதைக்கொண்டு அவன் அதைக் கண்டறிந்து கொள்ள முடியும்? இவ்விஷயத்தைப் பற்றி மனிதனுக்கு ஒரு சிறிதும் அனுபவம் கிடையாது.

தேவர்கள் இருப்பது உண்மையென்று வைத்துக் கொண்டாலும் அவைகளைத் தெரிந்து கொள்வதற்கு மனிதன் தெய்வீக ஞானத்தைப்பற்றிப் போதிய பழக்க மில்லாதவனாயிருக்கிறான். ஆயிரக் கணக்கானவர்கள் தேவர்களிடமிருந்து அருள்வாக்குகள் பெறுவதாகப் பாசாங்கு செய்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்றும் மனிதனுடைய கற்பனாசக்திக்கு மேற்போனதாக இல்லை. தேவ அருள் நிறைந்த புஸ்தகங்களில் காணப்படுவது போலவே, அருள் பெறாதவிடங்களிலும் வியப்பை விளைவிக்கும் விஷயங்கள் இருக்கின்றன. ஜூடன் தீர்க்க தரிசனங்களைப்போலவே வேறுமதத் தீர்க்க தரிசனங் களும் சரியாய் நிறைவேறியிருக்கின்றன. ஆவேசம் பிடி

ந்தவனுக்கே தனக்கு ஆவேசம் பிடித்திருப்பதாக நிச்சயமாய் அறியக்கூடவில்லையென்றால், அவன் தன் ஆவேசத்தைப் பிறருக்கு எப்படி நடத்திக்காட்ட முடியும்? தேவ அருள் என்பது ஒரு அதிசயம், அதைப் பற்றி ஆவேசக் காரர்களுக்குத்தான் சிறிது தெரியும். அவர்கள்தான் ஏதோ சாட்சியமும் கூறமுடியும். ஆனால் இந்த அறிவும், இந்த சாட்சியமும், ஆவேசக்காரனையே பூரணமாய்த் திருப்தி பண்ணும் இயல்புடையவையாயிருப்பதில்லை. ஆவேச விஷயத்தைப்பற்றிய கடைசி விளக்கம் இதுதான்.

கிறிஸ்துமதப் பழைய ஏற்பாட்டிலோ புதிய ஏற்பாட்டிலோ தெய்வ அருள் பெறாத மனிதர்களால் எழுதப்பட்டிருக்க முடியாத விஷயங்கள் இல்லை என்பது நிச்சயம். பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்துபுஸ்தகங்களாகிய பஞ்சாகமங்கள் என்பதில் எவ்வித விசேஷ மதிப்பும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சாதாரணமாய் மோசே என்பவரைக் குறித்து வழங்கப்படும் ஐந்து புஸ்தகங்களிலும் ஏதேனும் ஒரு விஞ்ஞான உண்மையாவது இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பைபிளின் முதற் புஸ்தகமாகிய ஆதியாகமம் என்னும் நூலில் ஒரு மனிதனை நல்வாழ்க்கைக்குச் செலுத்தக்கூடிய ஒரு வரி கூட எனக்குத் தெரிந்தவரையில் கிடையாது. பழைய ஏற்பாட்டின் இரண்டாவது புஸ்தகமாகிய பாத்திராகமம் என்னும் நூலிலும், நாலாவது புஸ்தகமாகிய எண்ணாகமத்திலும், முதற் புத்தகமாகிய ஆதியாகமம் என்னும் நூலிலும் உள்ள சட்டங்கள் பெரும்பாலும் சிறுபிள்ளைத்தனமானவையாயும் கொடுமையுள்ள

வையாயுமிருக்கின்றன. உண்மையாகவே, தேவ அருளைப் பெற்றிராத எந்த மனிதர்களாலும் எழுத முடியாத எத்தகைய விஷயமும் அப்புத்தகங்கள் எதிலும் இல்லையென்றே சொல்லுவேன் பழைய ஏற்பாட்டின் 7-ஆவது புஸ்தகமாகிய நியாதிபதிகள் என்ற புஸ்தகத்திலாவது, அல்லது யோஷுவா என்னும் புஸ்தகத்திலாவது அறிவுக்கு வியப்பை உண்டாக்கக் கூடிய எவ்வித விஷயமும் கிடையாது. சாமுவேல், கிரானிகிள்ஸ், இராஜாக்கள் முதலிய புஸ்தகங்களிலும் விசேஷம் ஒன்றுமில்லை. தேசச்சரித்திரம்என்பது முழுவதும் சிறுபிள்ளைத்தனமானதாக இருக்கிறது, அதில்கூறப்பட்ட விஷயங்களே திரும்பத்திரும்பக் கூறப்படுகின்றன. அதில் உபயோகமற்ற விபரங்களே காணப்படுகின்றன. அதில் காணப்படும் விஷயங்களில் உயர்ந்த தத்துவங்கள் கடுகளவும் கிடையாது. பரந்த நோக்கத்தோடு பொதுத் தன்மைக்குரிய விஷயங்கள் எதுவும் அதில் எடுத்தாளப் படவில்லை. மற்ற ஜனசமூகங்களைப்பற்றி ஒன்றுந்தெரியாது. மதிப்புக்குரிய எவ்வித சிறிய விஷயமும் அங்கு சொல்லப்படவில்லை. கல்வியைப்பற்றியோ, ஏதேனும் நூதன விஷயங்களைப்பற்றியோ, புதிதாய்க் க்ண்டுபிடிக்கப்பட்ட எதைப்பற்றியோ, அங்கு பிரஸ்தாபம் இல்லை. அறிவு விலாசமற்ற இந்தச் சோம்பேறிச் சரித்திரங்களினூடே கட்டுக்கதைகளும் அற்புதங்களும் இடையிடையே பரந்து கிடக்கின்றன. குருக்கள்மார்களை (புரோகிதர்களை) ஆதரித்த அரசர்களுக்கு வீண் புகழ்ச்சியும், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காதவர்களுக்குச் சாபங்களும், வசைகளும் அதில் மலிந்து கிடக்கின்றன.

மனிதவர்க்கத்தின் நினைவிலிருந்து பைபிளின் சரித்திர சம்மந்தமான புஸ்தகங்களின் விஷயங்களை யெல்லாம் ஒழித்துவிடுவதென்று வைத்துக்கொண்டால் நமது மதிப்புக்குரிய எவ்விஷத்தையும் நாம் இழந்தவர்களாக மாட்டோம்.

முதல் இராஜக்கள் என்ற புஸ்தகத்தையும் இரண்டாவது இராஜக்கள் என்ற புஸ்தகத்தையும் எழுதியவர்கள் தேவ அருள் பெற்றவர்களாக இருந்திருக்க முடியுமா? இவர்களெல்லாம் தேவ அருள் பெற்றோர்களென்றால், ரோம்சாம்ராஜ்யத்தின் அறிவும் வீழ்ச்சியும் என்ற புஸ்தகத்தை எழுதிய கிப்பன் என்பவர் தேவ அருள் பெறாமலே தமது நூலை எழுதி முடித்திருத்தல் சாத்தியமோ? பழைய எற்பாட்டின் 7-வது புஸ்தகமாகிய நியாதிபதிகள் என்னும் புஸ்தகத்தை எழுதியவர் ஆதியந்தமற்ற கடவுளின் கைக் கருவியாக இருந்தார் என்பது சாத்தியமா? ஐரோப்பாவின் அறிவு அபிவிருத்தி என்னும் நூலை எழுதிய ஜாண் W. டிரேப்பர் என்பவர்மட்டும் மறுஉலகத்தின் வெளிச்சக்கிரணம் ஒன்றுமில்லாமலே எழுதிமுடித்திருக்கலாமோ? பைபிளின் முதல் புஸ்தகமாகிய ஆதியாகமம் என்னும் நூலை எழுதியவர்மீது தேவன் ஆவாகனம் செய்திருந்தது என்பதை யாரே நம்புவர்? டார்வின் மட்டும், தானே ஆராய்ச்சி செய்து, தானே உண்மைகண்டு, தானாகவேதான் எழுதியிருக்கவேண்டுமோ?

கடவுளின் காரியங்கள் மனிதனுடைய காரியங்களை விட மிகவும் உயர்வானதாக இருக்கவேண்டாமா? பைபிளை எழுதியவர்கள் எல்லாம் உண்மையில் தேவ அருள்

பெற்றவர்கள் என்றால், அப்புத்தகம் இதர புத்தகங்களுக்கெல்லாம் மிகச்சிறந்ததாக இருக்கவேண்டாமோ? உதாரணமாக, சில சிலைகள் தேவ அருள் பெற்றவர்களாலேயே செதுக்கப்பட்டது என்று விவாதிக்கப்பட்டால், அச்சிலைகள் தேவ அருள் பெறாத மனிதர்களால் செதுக்கப்பட்டவைகளைவிட மிக உயர்வானவைகளாக இருத்தல் வேண்டுமன்றோ? வினஸ்-டி-மிலோ மனிதனுடைய வேலைதான் என்று ஒப்புக் கொள்ளப்பட்டால், தேவ அருள் பெற்ற எந்த சிற்பிகளையும் யாரும் நம்பமாட்டார்கள். அதைவிட உயர்ந்த சிலை ஒன்று காணப்படும் வரையிலாவது தேவ அருள் பெற்ற சிற்பிகளை யாரும் நம்ப முடியாது. சித்திர உலகத்திலும் அப்படித்தான். கோரட் என்பவர் தேவ ஆவேச புருஷனல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஏஞ்சலோ தெய்வீக உதவி பெற்று வந்தார் என்று யாரும் சொல்ல வரவில்லை. யாரோ ஒரு சித்திரக்காரன் கடவுளின் கைக்கருவியாயிருந்தான் என்று கூறவந்தால், அச்சித்திரக்காரனால் தயாரிக்கப்பட்ட படங்கள் மற்றவர்களால் தீட்டப்பட்ட எல்லாப் படங்களையும்விட கட்டாயமாக உயர்ந்தவைகளாகவே இருத்தல் வேண்டும்.

சாலமோன், சங்கீதம் என்னும் நூலை எழுதியது கடவுளுடைய அபார அருளால்தான் என்று அறிவுள்ள எந்த மனிதனாவது முடிவு கூறக்கூடுமா? ஆனால் லியர் பிரலாபம் மட்டும் தேவ அருள் பெறாத ஒருவர் எழுதியது என்று முடிவு செய்யக்கூடும்போதும், நாம் தவறிப்போவது சகஜம்தான். ஆனால் இலியட் என்னும் நூல், எஸ்தர் என்னும் புஸ்தகத்தைவிட உயர்ந்தது என்று எனக்குத்தோன்றுகிறது. ஹக்கெய், ஹோஸியா,

இவர்களுடைய நூல்களைவிட இலியட்டை நான் உயர்வாகக் கொள்ளுகிறேன். அச்சிலஸ், ஜெரிமியாவுக்கு உயர்ந்தவன். ஷேக்ஸ்பியர் எழுதிய நூல்கள் உலகத்திலுள்ள எல்லா தெய்வீக நூல்களையும்விட அளவுக் கடங்கா மேன்மையை உடையது.

எந்த மனிதனும் உண்மையை ஸ்தாபிக்க ஒருபோதும் முயற்சித்ததில்லை. அது கூடுமானதாக இருந்ததாகவும் தோன்றவில்லை. அற்புதம் என்ற பெயரால் உண்மையில் எதுவும் ஆராயப்படவில்லை. சாதாரணமாய் இருந்த ஒன்று, காலவளர்ச்சியில் எப்படி அற்புதமாக மாறுகிறது என்று அறிவது மிகச்சுலபம். விஷயங்கள் சேர்க்கப்படுவதாலும், விஷயங்கள் மறந்துபோகப் படுவதாலும், அதிசயமாக இருந்த ஒரு விஷயம், கால வளர்ச்சியில் எப்படி தெய்வீக சக்தி பெற்றதாக மாறுகிறது என்று அறிவதும் மிகச்சுலபம் ஆனால் எந்த அறிஞனாவது, உண்மையுள்ள மனிதனாவது எதையும் அற்புதத்தினாலேயே ருஜுப்படுத்த முயற்சிசெய்யலாமென்பது சாத்தியமாகத் தோன்றவில்லை.

சாக்ஷியம் வேண்டாதவர்களை அற்புதங்கள் திருப்தி செய்யக்கூடும் என்பது உண்மைதான். இல்லாவிட்டால் அவர்கள் எப்படி அற்புதத்தை நம்பியிருத்தல் முடியும்? அற்புதங்கள் நடைபெற்றாலும், அவைகளை மனிதர்களுக்குரிய சாட்சியங்களால் ஸ்தாபிப்பது முடியாத காரியம் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அதைவேறு விதமாகச் சொல்லவேண்டுமானால் அற்புதங்கள் அற்புதங்களாலேதான் ஸ்தாபிக்கப்பட முடியும். ஒரு சந்தர்ப்

பத்தியும், அற்புதங்களே சாட்சியங்களாக இருத்தல் முடியாது. அற்புதங்கள் நடப்பதை நேரே பார்த்தவர்களுக்கு மட்டும் அவை சாட்சியங்களாக இருத்தல்கூடும். அற்புதங்களுக்கு ஏதேனும் மதிப்பு இருக்கவேண்டுமானால், அவை சாசுவதமானவையாயிருத்தல் வேண்டும். உண்மையில் நடந்திருக்கும் அற்புதங்கள் எல்லாம் ஏதேனும் ஒழுக்க உண்மையைப்பற்றிவிளக்கப்படுத்தியதில்லை. அல்லது அவை மக்கள் கடமைகளில் எதையும் பற்றி எடுத்துச் சொல்லியதும் கிடையாது. இவைகளை மக்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எந்த மனிதனாவது தேவ அருள் பெற்றவன் என்று சொல்லப்பட்டால், அதை ஒரு இரகசிய அற்புதமாகவே கொள்ளவேண்டும். இதைப்பற்றி யாருக்கும் ஒன்றும் தெரியாது. தேவ அருள் பெற்ற மனிதன்தான் இதைப் பற்றி சந்தேகப்பட முடியும். அவ்விஷயத்தைப்பற்றி வேறு யாருக்கும் திருப்திகரமான சாட்சியம் அளிப்பது தேவ அருள் பெற்றவன் சக்தியில்இல்லை.

தெய்வீக சக்தியை ஸ்தாபிப்பதற்கு மனிதனுடைய சாட்சியம் போதாததாக இருக்கிறது. அதை அறிவுலக அநுபவம் எதிர்த்து நிற்கும் போது, ஒரு மனிதனுடைய சாட்சியமோ, அல்லது ஒரு டஜன் மனிதருடைய சாட்சியமோ, அதற்கு பதில் சொல்ல முடியாது. அற்புதங்களால் ருஜுப்பிக்கப்படவேண்டிய ஒரு புஸ்தகம் உண்மையாக இருந்தால், அது தேவ அருள் பெற்றதாயிருப்பினும் இல்லாதிருந்தாலும் வித்தியாசம் ஒன்றுமில்லை. அது உண்மையல்லாததாயிருக்கும்போது தேவ அருள்

வந்து அப்புத்தகத்தின் மதிப்பை உயர்த்திவிட முடியாது.

உண்மை என்னவென்றால், கிறிஸ்தவத் திருச்சபைகள் எப்போதும் பொய்க்குப் பரிசளித்துக்கொண்டே வந்திருக்கின்றன. தெய்விக விஷயங்களுக்கும் அற்புதச் செயல்களுக்குமே அப்பரிசுகள் ஏற்பட்டிருந்திருக்கின்றன. அந்நோக்கத்தை ஆதரிக்கக்கூடிய எல்லா வாக்குமூலங்களையும் கிறிஸ்தவத் திருச்சபைகள் வரவேற்றுக்கொண்டு வந்தன. அற்புதச் செயல்களுக்குச் சாட்சியங்களைக் கண்டதாகச் சொல்லப்பட்ட வழிப்போக்கர்களுக்கும் பரிசுகள் கிடைத்து வந்தன. லோத் என்றவனுடைய மனைவி உப்புத் தூணாக மாறியிருந்ததை, தான் நேரில் கண்டதாகச் சொன்னவனுக்கும், பேராவின் ரதங்கள் சென்ற பாதையைச் செங்கடல் மணல்களில், தான் கண்டதாகச் சொன்னவனுக்கும் பரிசுகள் கொடுக்கப்பட்டன. ஆபாசமான விஷயங்களையும் நடக்க முடியாத விஷயங்களையும் தன் புஸ்தகத்தில் நிறைத்து வைத்த சரித்திர ஆசிரியர்களுக்குக் கிறிஸ்தவ திருச்சபைகள் ஏராளமான பெருமைகளை வழங்கின. கிறிஸ்தவ திருச்சபைகளுக்கென்று பூதத்துவ சாஸ்திரிகளும், வான சாஸ்திரிகளும் பிரத்தியேகமாய் இருந்து வந்தார்கள். அவர்கள்தான் உலக சிருஷ்டியைப்பற்றியும் நட்சத்திரக் கூட்டங்களைப் பற்றியும், பைபிள் முறைப்படி கட்டுக்கதை கட்டி விட்டார்கள். வாளையும் நெருப்பையும் கொண்டு உண்மையை வெளியிட்ட வீரர்களையும், போறிஞர்களையும் திருச்சபை கொலை செய்து வந்தன. ஆராய்ச்சிக்கும், பகுத்தறிவியக்கத்திற்கும் அவைகள் சத்துருக்களாயிருந்தன.

நம்பிக்கையும் கட்டுக்கதையும்தான் கூட்டுறவில் இருந்தன.

இக்காலத்தில் உலகத்தின்பேரறிவு, அற்புதம் என்றவைகளை மறுக்கிறது. அறியாமை என்பதுதான் தெய்விகத்தன்மையை வளர்ப்பதாயிருக்கிறது. கிறிஸ்து மதத்தின் அஸ்திவாரம் சின்னபின்னமாய் விட்டது. அது மறைந்துகொண்டே வருகிறது. அதன் முழு கட்டிடமும் தகர்க்கப்படவேண்டியதுதான். இயற்கை என்பதை உண்மை. அற்புதத் திருவிளையாடல்கள் என்பவையெல்லாம் பொய்; முற்றிலும் பொய்.

Unmai Vilakkam Press, Erode.